KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 03 April 2026 இதழ்:- 13

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# இலங்கை ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி தமிழ்த் தலைவர்களிடம் கூறிய கள நிலை என்ன? தமிழர் பகுதிகளில் அநுராவின் செல்வாக்கு அதிகரிப்பு!



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க்ஆன் ட்ரே பிரான்ஞ் கடந்த வாரம் யாழ்ப்பாண த்துக்கான விஜயத்தினை மேற்கொண் டிருந்தார். இந்த விஜயத்தின் போது அவர் பல்வேறு கிராமத்தினரையும் இளைஞர்கள், பெண்கள், மூத்த பிரஜை கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட தரப்பினர் என்று பலரையும் சந்தித்து உரையாடியிருந்தார். (4ம் பக்கம் பார்க்க)

# நடுநிலைக்கு வந்த சோதனை!

# ஈரான் போரில் 3 பில்லியன் டொலர் மதிப்புள்ள அமெரிக்க இராணுவச் சொத்துக்கள் சேதமென பென்டகன் அதிகாரி தகவல்!

ஈரான் மீதான அமெரிக்க – இஸ்ரேல் கூட்டுத் தாக்குதல் தொடங்கி மூன்று வாரங் கள் நிறைவடைந்துள்ள நிலையில், ஈரானின் ஏவுகணை மற்றும் டிரோன் தாக் குதல்களால் அமெரிக்காவின் 3 பில்லியன் டாலர் மதிப்புள்ள அதாவது இந்திய மதிப்பில் சுமார் ரூ.29 ஆயிரம் கோடி மதிப்பிலான இராணுவத் தளவாடங்கள் சேத மடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (5ம் பக்கம் பார்க்க)



# ஒரு கொலையும் யாழ்ப்பாணத்தவரின் பயங்களும்





# கொழும்பு மைய அரசியலும் இணக்க அரசியலும் குற்றமா?


தமிழ்த்தேசிய அரசியலை கொழும்பு மைய அரசியல் பலவீனப்படுத்துகிறது என்ற பெருங் கவலை தீவிரத் தமிழ்த்தேசிய அரசியல் விருப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா. சம்பந்தனும் அவரால் தமிழ் அரசியற் பரப்பிற்குள் கொண்டு வரப்பட்ட சுமந்திரனும் தான் கொழும்பு (20ம் பக்கம் பார்க்க)

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX ACE REALTY INC., BROKERAGE — EXPERIENCE THE DIFFERENCE — INDEPENDENTLY OWNED & OPERATED

We are ace


## Siva Kandiah
Sales Representative

**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

## Piravien Siva
Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**
piravien@gmail.com






23 Years Real Estate Experience


150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada


**Bus: 416-293-4500**


**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**


### Adelaide Ave E / Simcoe St

**Oshawa** — **$699,000**
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


### Kingston Rd & Sheppard Ave E

**Scarborough** — **$710,000**
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area


### Islington Ave / Steeles Ave W

**Toronto** — **$749,000**
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

### Neilson Road & Sheppard

**Scarborough** — **$839,000**
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

### Danforth and Dawes

**Toronto** — **$839,999**
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

### Williamson & Westney

**Ajax** — **$849,000**
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home

### Rogers and Dufferin St

**Toronto** — **$849,999**
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom


### Markham Rd & Lawrence Ave

**Scarborough** — **$999,000**
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow


### Harmony Road / Conlin Road

**Oshawa** — **$999,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

### Cameo St / Burkolder Dr


**Pickering** — **$999,900**
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

### Hwy10 / Hwy 89

**Shelburne** — **$999,900**
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

### Markham/Steeles

**Markham** — **$999,999**
3+1 Beds • 3 Bath • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

### Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE

**Scarborough** — **$2,700**
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

### Markham Rd & Sheppard Ave
FOR LEASE

**Scarborough** — **$2,250**
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

### Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE

**Oshawa** — **$1,500**
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

### Markham & Denison
FOR LEASE

**Markham** — **$1,450**
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்.இந்துக்கல்லூரி வரலாற்றுச் சாதனை




2025ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியான நிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கடந்த 25 வருடங்களில் இம்முறை அதிகூடிய மாணவர்கள் 3ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்து ள்ளனர். அதன்படி 2025 ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் யாழ் இந்துக் கல்லூரியின் 64 மாணவர்கள் 3ஏ சித்தி களையும் 31 மாணவர்கள் 2ஏ சித்தி களையும் 21 மாணவர்கள் ஏ2பி சித்தி களையும் பெற்றுள்ளனர்.

இவர்களில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த 19 மாணவர்களும் பௌதீக விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த 42 மாணவர்களும், கலைப் பிரிவைச் சேர்ந்த 02 மாணவர்களும் வணிகப் பிரிவைச் சேர்ந்த ஒரு மாணவர் என மொத்தம் 64 பேர் 3ஏ சித்திகளைப் பெற் றுள்ளனர்.

குறித்த பரீட்சைக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து 445 மாணவர்கள் விண்ணப்பித்ததுடன் 418 மாணவர்கள் தோற்றியிருந்த நிலையில் 342 மாணவர்கள் பல்கலைக்கழக அனு மதிக்கு தகுதி பெற்றுள்ள நிலையில் பரீட்சை சித்திவீதம் 81.82 வீதமாக பதிவாகியுள்ளது. மேலும் கடந்த 25 ஆண்டுகளில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 50ற்கு மேற்பட்ட மாண வர்கள் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ள நிலையில் முறையே 2023 இல் 56 மாண வர்களும் 2024 இல் 55 மாணவர்களும் 3ஏ சித்திகளைப் பெற்றிருந்தனர். அத்து டன் 2024ஆம் ஆண்டிற்கான உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரியை சேர்ந்த இரண்டு சகோதரர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களை பெற்ற நிலை யில் தேசிய மட்டத்தில் 3ஆம் மற்றும் 5ஆம் இடங்களை பெற்றமை குறிப்பிடத் தக்கது.

# தேசிய அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்த கிளிநொச்சி மாணவனைப் பாராட்டிய ஆளுநர்



2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது த்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு களின் அடிப்படையில், கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்த கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் தெ.திருக் குமரனை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேரில் சந்தித்துத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார். கிளி நொச்சி மகா வித்தியாலயத்துக்கு புதன் கிழமை நேரடியாகப் பயணம் செய்த ஆளுநர் (13ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# இலங்கை ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி தமிழ்த் தலைவர்களிடம் கூறிய கள நிலை என்ன? தமிழர் பகுதிகளில் அநுராவின் செல்வாக்கு அதிகரிப்பு!

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ஞ் கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது அவர் பல்வேறு கிராமத்தினரையும் இளைஞர்கள், பெண்கள், மூத்த பிரஜைகள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட தரப்பினர் என்று பலரையும் சந்தித்து உரையாடியிருந்தார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தின் அன்றாட வாழ்வியலுடன் தொடர்புபட்ட சில நிகழ்வுகளிலும் பங்கேற்றிருந்தார். இவ்வாறான நிலையில் அவர் தமிழ்த் தலைவர்களை சந்தித்த போது முக்கியமான களநிலைமை பற்றிய தனது அவதானிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை மூன்று தருணங்களின் வெவ்வேறு அணியாகச் சந்தித்த அவர் முதலில் அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டிருந்தார். விசேடமாக சமகால அரசாங்கத்தின் போக்குகள் மற்றும் செயற்பாடுகள், வடக்கு மக்களின் நிலைப்பாடுகள் ஆகியவற்றை மையப்படுத்தியதாகவே அவருடைய கருத்துப்பரிமாற்றம் அமைந்திருந்தது. இவ்வாறான நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பி-ரதிநிதி மார்க்- ஆன்ட்ரே பிரான்ஞ் தனது அவதானிப்பையும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களிடத்தில் பகிர்ந்துள்ளார்.



அதாவது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது நீங்கள் பல்வேறு குறைபாடுகளையும் குறிப்பிட்டு கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளீர்கள். அதில் நியாயப்பாடுகள் வாதப் பிரதிவாதங்கள் காணப்பட்டாலும், நான் சந்தித்த இளைஞர், யுவதிகள் மற்றும் ஏனைய பல கிராம மட்டத்திலான தரப்பினர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விரும்புபவர்களாக, அதற்கு ஆதரவளிப்பவர்களாக இருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதனையடுத்து, தமிழ்த் தலைவர்கள் அதற்கு ஆட்சியில் உள்ளவர்கள் என்பதால் அவ்விதமான சூழல் காணப்படுவதாக இருக்கலாம். மக்கள் கொள்கையிலிருந்து விலகிச் செல்லவில்லை என்பது உட்பட பல விடயங்களை வெளிப்படுத்த முனைந்திருந்தனர்.

இருப்பினும் ஐ.நா.வதிவிடப்பிரதிநிதி மிகத்தெளிவாக கணிசமான இளையோர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினை வெகுவாக ஆதரிக்கின்றனர் என்ற தகவலை மீண்டும் குறிப்பிட்டுக் கூறினாராம். இந்நிலையில் குறித்த சந்திப்புக்களில் பங்கேற்ற தமிழ்க்கட்சிகளின் தலைவர் களில் ஒருவர் வெளிநாட்டு பிரதிநிதி யொருவருக்கு புரிந்த கள யதார்த்தம் எமது தலைவர்களுக்கு புரிந்து களப் பணியாற்ற தயாராக இல்லையே என்று தனக்கு நெருங்கிய ஒருவரிடம் கவலையுடன் பகிர்ந்து கொண்டாராம் என்பது பிறிதொரு விடயம்.

## சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நாவற்குழி விகாரையின் இளநிலை பிக்கு கைது!

நாவற்குழி விகாரையின் இளநிலை பிக்கு, சிறுமியை துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழி விகாரைக்கு அருகில் வசிக்கும் சிறுமி விகாரை வளாகத்தில் வடிகட்டிய (பில்டர்) நீரினை பெறுவதற்காக 28 மார்ச் 2026 சனிக்கிழமை சென்ற வேளை விகாரைக்கு புதிதாக வந்த இளநிலை பிக்கு சிறுமியை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமி தனது தாயாரிடம் தெரிவித்த நிலையில் தாயாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த இளநிலை பிக்குவை கைது செய்து இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியவேளை பிக்குவை எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிகாரியை உழவு இயந்திரத்தால் மோதி கொலை செய்ததுடன் மற்றுமொரு பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு படுகாயம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர். பிரதான சந்தேகநபர் தலைமறைவாக உள்ள நிலையில், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை சம்பவ இடத்திற்கு இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் விரைந்துள்ளனர். பொலிசாரை கண்டதும் உழவு இயந்திரத்தை செலுத்தி வந்தவர், வேகத்தை அதிகரித்து மோதியுள்ளார்.




# ஈரான் போரில் 3 பில்லியன் டொலர் மதிப்புள்ள அமெரிக்க இராணுவச் சொத்துக்கள் சேதமென பென்டகன் அதிகாரி தகவல்!

ஈரான் மீதான அமெரிக்க – இஸ்ரேல் கூட்டுத் தாக்குதல் தொடங்கி மூன்று வாரங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், ஈரானின் ஏவுகணை மற்றும் டிரோன் தாக்குதல்களால் அமெரிக்காவின் 3 பில்லியன் டாலர் மதிப்புள்ள அதாவது இந்திய மதிப்பில் சுமார் ரூ.29 ஆயிரம் கோடி மதிப்பிலான ராணுவத் தளவாடங்கள் சேதமடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' நாளிதழ் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது ஈரான் உடனான மோதல் தொடங்கிய முதல் மூன்று வாரங்களில் மட்டும் அமெரிக்காவிற்கு சுமார் 1.4 பில்லியன் டாலர் முதல் 2.9 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.13,000 கோடி முதல் ரூ.29,000 கோடி வரை) இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இதனை பென்டகன் முன்னாள் பட்ஜெட் அதிகாரி எலைன் மெக்கஸ்கர் உறுதிப்படுத்தியுள்ளார். ஈரான் நடத்திய தாக்குதலில் அமெரிக்காவின் அதிநவீன எஃப்-35 ரக போர் விமானம் ஒன்று பலத்த சேதமடைந்து



அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. மேலும், குவைத் விமானம் தவறுதலாகச் சுட்டதில் மூன்று எஃப்-15இ ரக விமானங்கள் விழுந்து நொறுங்கின.

ஈராக் வான்பரப்பில் இரண்டு எரிபொருள் நிரப்பும் விமானங்கள் மோதிக் கொண்டதில் ஆறு வீரர்கள் உயிரிழந்தனர். சவுதி அரேபியாவில் உள்ள இளவரசர் சுல்தான் விமானப் படை தளத்தின் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், ஐந்து கேசி-135 ரக விமானங்கள் சேதமடைந்து தற்போது பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன.

இது தவிர சுமார் 12-க்கும் மேற்பட்ட அதிநவீன 'எம்.கியூ -9 ரீப்பர்' வகை ஆளில்லா உளவு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. சவுதி அரேபியா, கத்தார் மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களில் வைக்கப்பட்டுள்ள ரேடார் அமைப்புகளும் ஈரானின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

கிரீஸ் நாட்டின் சூடா விரிகுடாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் பிரம்மாண்டமான 'யுஎஸ்எஸ் ஜெரால்ட் ஆர். ஃபோர்டு' போர்க்கப்பலிலும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதன் மூலம், 3 பில்லியன் டாலர் மதிப்பிலான அமெரிக்க ராணுவ சொத்துகள் பலத்த சேதத்தை சந்தித்துள்ளன. இவ்வாறு அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதலைத் தொடங்கின. இந்த மோதலில் இதுவரை 13 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளனர் சுமார் 290 வீரர்கள் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட மற்றும் இழந்த ராணுவத் தளவாடங்களை மீண்டும் வாங்குவதற்காக சுமார் 200 பில்லியன் டாலர் கூடுதல் நிதியை ஒதுக்க அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் திட்டமிட்டுள்ளதாக வால் ஸ்ட்ரீட் ஜர்னல் தெரிவித்துள்ளது.(த இந்து)

## அமெரிக்க புலனாய்வுத்துறை தலைவர் காஷ் படேலின் மின்னஞ்சலை ஹேக் செய்த ஈரான் ஆதரவுக் குழு



அமெரிக்காவின் எஃப்பிஐ (குடீஐ) புலனாய்வு அமைப்பின் இயக்குநர் காஷ் படேலின் தனிப்பட்ட மின்னஞ்சல்கள் மற்றும் புகைப்படங்களை ஈரானுடன் தொடர்புடைய குழு ஹேக் செய்தது. மேலும், அந்தக் குழு காஷ் படேலின் புகைப்படங்களையும், ஆவணங்களையும் இணையத்தில் வெளியிட்டது.

Handala Hack Team' என்ற ஈரான் தொடர்புடைய ஹேக்கர் குழு, காஷ் படேலின் மின்னஞ்சல் கணக்கை ஹேக் செய்ததாக அறிவித்துள்ளது. அந்தக் குழு, படேலின் பெயர் இனி வெற்றிகரமாக ஹேக் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம் பெறும் என்று தெரிவித்தது. அமெரிக்காவின் சில பாதுகாப்பு அதிகாரிகள் இச்சம்பவம் நிகழ்ந்ததை உறுதிப்படுத்தினர். இருப்பினும், இந்தச் சம்பவம் குறித்து எஃப்பிஐ மற்றும் அமெரிக்க நீதித்துறை ஆகியவை இதுவரை எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இந்த ஹேக்கிங் மூலம், பத்தாண்டுகளுக்கும் மேலான பழமையான சில ஆவணங்கள் ஹேக் செய்யப்பட்டுள்ளது. அந்த மின்னஞ்சல்களில், படேலின் பயணங்கள் மற்றும் வணிகம் தொடர்பான கடிதப் பரிமாற்றங்கள் வெளியாகியுள்ளன. ஒரு பழமையான ஸ்போர்ட்ஸ் கார் அருகே நிற்கும் படேல், வாயில் சிகார் வைத்துக் கொண்டு அவர் போஸ் கொடுக்கும் படம் மற்றும் கையில் ரம் பாட்டிலுடன் கண்ணாடி முன் நிற்கும் படம் ஆகியவை வெளியாகியுள்ளது.

கடந்த 2025-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் எஃப்பிஐ (FBI) புலனாய்வு அமைப்பின் 9வது இயக்குநராக இந்திய வம்சாவளியை சேர்ந்த காஷ் படேல் பதவியேற்றுக் கொண்டார்.

தங்களை பாலஸ்தீன ஆதரவு ஹேக்கர் குழுவாக சொல்லிக் கொள்ளும் இந்தக் குழு, சமீபத்தில் 'Stryker' என்ற மருத்துவ உபகரண நிறுவனத்தின் கணக்கையும் ஹேக் செய்தது. ஈரானிய இணையப் புலனாய்வுத் துறையுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இந்தக் குழு, தெற்கு ஈரானின் மினாப் நகரில் உள்ள குழந்தைகள் பள்ளி மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாகவே இந்த ஹேக்கிங் நடத்தப்பட்டதாகக் கூறியது.

## அரசியலமைப்பு மூலமான தீர்வின் ஊடாக போரை நிறுத்த அயராது உழைத்தவர் நீலன் - எரிக்

படுகொலை செய்யப்பட்ட நீலன் திருச்செல்வம் இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நிலவிய பிளவுகளை சீரமைப்பதற்குப் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து போராடியதாகவும், போரை நிறுத்தி நாட்டின் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு ஏதுவான வகையில் அரசியலமைப்பின் ஊடாகத் தீர்வு காண்பதற்கு அயராது உழைத்ததாகவும் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவரும், நோர்வே நாட்டு இராஜதந்திரியுமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி நீலன் திருச்செல்வம் தொடர்பில் பிரசன்னா சண்முகதாஸ் என்பவரால் தயாரிக்கப்பட்டுள்ள (Neelan: Unsilenced) எனும் ஆவணத் திரைப்படத்தைப் பார்வையிட்டதாகக் குறிப்பிட்டு அது பற்றி தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திருச்செல்வத்தைப் பற்றியதாகும். அவர் இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நிலவிய பிளவுகளை சீரமைப்பதற்குப் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து போராடியவராவார். நாட்டில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கும், போரை நிறுத்துவதற்கும் ஏதுவான வகையில் அரசியலமைப்பின் ஊடாகத் தீர்வு காண்பதற்கு அவர் அயராது உழைத்தார்.

உலகளாவிய அமைதித் தூதுவராகவும், மனித உரிமை ஆர்வலராகவும் திகழ்ந்த அவர், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு மிகச்சிறந்த மனிதராவார்' என்றும் எரிக் சொல்ஹெய்ம் அவரது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.


அதேவேளை 'துரதிஷ்டவசமாக 1999 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக்குண்டுத்தாக்குதலின் விளைவாக, இந்தக் கொடூர மோதலினால் பலியான பலரில் அவரும் ஒருவராக மாறினார்.



அந்த ஆவணப்படம் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தை செயன்முறை தொடர்பான பல நினைவுகளை மீட்டெடுக்கும் வகையில் அமைந்திருந்ததாக அவர் அப்பதிவில் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று 'இந்த ஆவணத் திரைப்படம் தமிழ் சட்டத்தரணியும், அரசியல்வாதியுமான எனது நண்பர் நீலன் பின்னாளில் சமாதானத்தை ஏற்படுத்துவதை முன்னிறுத்திப் பணியாற்றிய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அன்ரன் பாலசிங்கம், இதுவரை முன் வைக்கப்பட்டவற்றில் நீலனின் அரசியலமைப்பு முன்மொழிவுகளே மிகச்சிறந்தவை எனக் குறிப்பிட்டார்' என்றும் அவர் அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கனடா அமெரிக்க எல்லையில் கனேடியர் சந்தித்த மோசமான அனுபவம்



அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்லும் கனேடியர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து விட்ட நிலையிலும், கனேடியர்களை அமெரிக்க எல்லை அதிகாரிகள் மோசமாக நடத்தும் சம்பவங்கள் தொடர்கின்றன. இந்நிலையில் அமெரிக்கா செல்ல முயன்ற கனேடியர் ஒருவர், அமெரிக்க எல்லையில் மோசமான அனுபவம் ஒன்றை சந்தித்துள்ளார்.

கெவின் லார்சன் (68) என்னும் கனேடியர் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் திகதி, நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா செல்ல முயன்றுள்ளார். ட்ரம்ப் நிர்வாகம் கனேடியர்களை நடத்தும் விதம் குறித்து தான் நன்கு அறிந்திருப்பதாக தெரிவிக்கும் கெவின், தன்னை அமெரிக்க எல்லை அதிகாரிகள் திருப்பி அனுப்பி. விடக் கூடும் என்பதைக் கூட தான் அறிந்து வைத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

என்றாலும் இப்படி ஒரு மோசமான அனுபவம் தனக்குக் கிடைக்கும் என தான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்கிறார் அவர். ஆம், எல்லையில் கெவினை நிறுத்தி கேள்விகள் கேட்ட அமெரிக்க எல்லை அதிகாரிகள், அவரிடம், தான் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவளிப்பதில்லை என கூறும் ஒரு ஆவணத்தில் கையெழுத்திடும்படி கூறியுள்ளனர்.

அதைத் தொடர்ந்து, கெவினிடம் அவரது DNAவை கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்கள் அமெரிக்க அதிகாரிகள்.

தான் ஒன்றும் குற்றவாளி அல்ல என்று கூறி DNAவை சேகரிக்க கெவின் அனுமதி மறுக்க, அவரை ஓராண்டு சிறையில் அடைக்க முடியும் என மிரட்டியுள்ளார்கள் அவர்கள். ஆகவே, வேறு வழியில்லாமல் தனது னுயேவை சேகரிக்க அவர்களுக்கு அனுமதியளித்துள்ளார் அவர்.

இந்த விடயத்தை அவர் ஊடகங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ள நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜேமி ராஸ்கின் (Jamie Raskin) மற்றும் டெபி டிங்கல் (Debbie Dingell) ஆகிய இருவரும் கெவின் நடத்தப்பட்ட விதத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

ஏற்கனவே கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு ட்ரம்பால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ட்ரம்ப் நிர்வாக அதிகாரிகள் கெவினை நடத்திய விதம் குறித்து அவர்கள் அதிகாரிகளிடம் விளக்கம் கோரியுள்ளார்கள்.

அத்துடன் மிச்சிகனைச் சேர்ந்த டெபி டிங்கல் கனடா தங்கள் குடும்பம் என்றும் கனடாவுக்கும் மிச்சிகனுக்குமான உறவு விலையேறப் பெற்றது என்றும், நாங்கள் கனேடியர்களை நேசிக்கிறோம் என்றும் கூறியுள்ளதுடன், கெவின் விவகாரம் குறித்து தாங்கள் விளக்கம் கேட்டுள்ளதாகவும், பதில் கிடைக்கும் வரை விடமாட்டோம் என்றும் கூறியுள்ளார்கள்.

# கூச்சமில்லாமல் ஜிப்பைக் கழற்றுபவர்கள் - சின்மயி

பாலியல் குற்றங்கள் குறித்து நடிகரும் அரசியல்வாதியுமான எஸ்.வி. சேகர் தெரிவித்த கருத்துக்கள் தற்போது பெரும் சர்ச்சையாக மாறியுள்ளன. அவரது பேச்சுக்குப் பாடகி சின்மயி ஸ்ரீபாதா நேரடியாகவும் கடுமையாகவும் பதிலடி கொடுத்துள்ளார். இந்த விவகாரம் தற்போது சமூக வலைதளங்களில் பேசு பொருளாகியுள்ளது.

திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய எஸ்.வி. சேகர், சமூகத்தில் ஒழுக்கம் குறைந்து வருவதாகவும், குழந்தைகளுக்குக் கலாச்சாரம் மற்றும் ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அத்துடன், அனைத்துத் தவறுகளுக்கும் அரசாங்கத்தையே குறை கூறக் கூடாது என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து பாலியல் குற்றங்கள் குறித்துப் பேசிய அவர், சர்ச்சையைத் தூண்டும் வகையில் சில உதாரணங்களைக் கூறினார் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று சொல்ல முடியாது. நான் என் வீட்டைப் பூட்டாமல் விட்டுவிட்டு, திருடன் திருடினான் என்றால் அதற்குச் சட்டம் எப்படிப் பொறுப்பாகும்? எனக் கேள்வி எழுப்பினார். பெண் குழந்தைகளைப் பெற்றோர்கள் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் வெளியே சென்றால் ஒருவரைத் துணைக்கு அனுப்ப வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மிக முக்கியமாக, அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுப் பேசிய அவர், ஒரு பெண் புதருக்குள் சென்றதாகச் சொல்கிறார்கள் அவர் ஏன் அங்கு சென்றார்? புதருக்குள் பொலிஸாரால் மின்விளக்கு பொருத்த முடியுமா? எனக் கேட்டார். பாதிக்கப்பட்ட பெண்ணையே குறை கூறும் வகையில் அமைந்த இந்த வரிகள் சமூக வலைதளங்களில் கடும் விமர்சனங்களைக் கிளப்பின.

எஸ்.வி. சேகரின் இந்த கருத்துக்குப் பாடகி சின்மயி தனது 'எக்ஸ்' (ஓ) பக்கத்தில் நேரடியான பதிலடி கொடுத்துள்ளார். அவரது பதிவில் உள்ள முக்கிய அம்சங்கள்: ஒரு பெண் ஏன் புதருக்குள் சென்றார் என்று கேட்கிறீர்கள். அந்த இடத்தில் கழிவறை வசதியே இல்லையென்றால் அவர் வேறு என்ன செய்வார்? எனச் சின்மயி கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்தப் பெண் இயற்கை உபாதையைக் கழிப்பதற்காகவே அங்கு சென்றார் என்ற தகவலை அவர் சுட்டிக் காட்டினார். இந்தியாவில் போதிய கழிவறை வசதிகள் இல்லாததால், திறந்தவெளியைப் பயன்படுத்தும் பெண்கள் மற்றும் சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாவது இது முதல் முறையல்ல என்பதை அவர் நினைவுபடுத்தினார்.

எவ்விதக் கூச்சமும் இன்றிப் பொது வெளியில் ஜிப்பை கழற்றி சிறுநீர் கழிக்கும் ஆண்களிடம் கேள்வி கேட்காதவர்கள், பாதுகாப்பற்ற சூழலில் தள்ளப்படும் பெண்களைக் குறை கூறுவது ஏன் என அவர் சாடியுள்ளார். (18ம்பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஒடுக்கப்பட்டவர்களுக்கு அறிவுரை கூறுவதை விடுத்து உலகம் ஒடுக்கு முறையாளரை துணிந்து எதிர்க்க வேண்டும்!



தற்காப்புக்கான உரிமை என்பது பிறரால் வழங்கப்படும் சலுகை அல்ல. மாறாக அது ஒவ்வொரு இறையாண்மை கொண்ட தேசத்தின் உள்ளார்ந்த உரிமையாகும். உலகம் உண்மையில் அமைதியின் மீது அக்கறை கொண்டிருந்தால், ஒடுக்கப்பட்டவர்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு இலகுவாக அறிவுரை கூறுவதை விடுத்து, ஒடுக்குமுறையாளரை துணிச்சலுடன் எதிர்கொள்ள முன்வர வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார். மத்திய கிழக்கில் தீவிரமடைந்திருக்கும் மோதலகளின் பின்னணியில் தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அலி சப்ரி மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

ஒரு நாடும் அதன் மக்களும் திட்டமிட்டுக் குறிவைக்கப்படும் போது, அந்நாட்டின் இறையாண்மை மீறப்படும் போது, அதன் இருப்பே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும்போது, அதற்கு நிகராக அந்த நாடு எதனைச் செய்யவேண்டும் என உலகம் எதிர்பார்க்கிறது? மௌனத்தையா? அல்லது அடிபணி தலையா? சுயமரியாதை கொண்ட எந்தவொரு நாடும் தனது சொந்த அழிவை எதிர் நடவடிக்கைகள் எவையுமின்றி வெறுமனே வேடிக்கை மாத்திரம் பார்த்துக்கொண்டிருக்காது.

எனினும் இன்றளவிலே நாம் மிகுந்த கரிசனைக்குரிய இரட்டை நிலைப்பாட்டையே காண்கிறோம். ஆக்கிரமிப்பாளர் தண்டனை ஏதுமின்றித் துணிச்சலாகச் செயற்படுகிறார். ஆனால் பாதிக்கப்பட்டவருக்கோ 'நிதானத்துடன் செயற்படல்' குறித்து உபதேசிக்கப்படுகிறது. வன்முறையை கட்டவிழ்த்துவிடுபவர்களுக்கு அதனை நிறுத்தும்படி மிக அரிதாகவே அறிவுத்தப்படுகிறது. ஆனால் தற்காப்புக்காகப் போராடுபவர்களோ 'உலகளாவிய விளைவுகளைக் கருத்திற் கொள்ளும்படி' எச்சரிக்கப்படுகிறார்கள். இது நியாயமானதோ அல்லது தர்க்க ரீதியில் ஏற்புடையதோ அல்ல. மாறாக இதுவொரு ஆழமான அநீதியாகும். தற்காப்புக்கான உரிமை என்பது பிறரால் வழங்கப்படும் சலுகை அல்ல. மாறாக அது ஒவ்வொரு இறையாண்மை கொண்ட தேசத்தின் உள்ளார்ந்த உரிமையாகும்.

உலகம் உண்மையில் அமைதியின் மீது அக்கறை கொண்டிருந்தால், ஒடுக்கப்பட்டவர்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு இலகுவாக அறிவுரை கூறுவதை விடுத்து, ஒடுக்குமுறையாளரை துணிச்சலுடன் எதிர்கொள்ள முன்வ ரவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

# அலிசப்ரி அவர்களே! ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழினம் போராடிய போது உங்கள் மனச்சாட்சியும் குரலும் எதுவாக இருந்து?



முன்னாள் நீதி அமைச்சர் அலிசப்ரி அவர்களே! இன்றைய அரசியல் அரங்கில் சில குரல்கள் தாமதமாக எழுகின்றன. சில கருத்துக்கள் தகுந்த நேரத்தில் வெளி வராமல், வரலாற்றின் காயங்கள் காய்ந்த பின்னர் மட்டுமே வெளிப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒரு கருத்தாகவே உங்கள் கருத்தைப் பார்க்க வேண்டியுள்ளது. சமீபத்தில் நீங்கள் முன் வைத்துள்ள ஒடுக்கப்பட்டவர்களுக்கு அறிவுரை கூறுவதற்கு பதிலாக உலகம் ஒடுக்குமுறையாளரைத் துணிந்து எதிர்க்க வேண்டும என்ற வாதம் பார்க்கப்படுகிறது.

இந்தக் கருத்து தனிப்பட்ட முறையில் தவறானதல்ல. மாறாக, அது மனிதநேயத்தின் மையக் கோட்பாடாகவே கருதப்பட வேண்டியது. ஆனால், இந்த உண்மை எப்போது உங்களுக்குத் தெரிகிறது? ஏன் இப்போது கூற முற்படுகிறீர்கள்? எந்த வரலாற்றுப் பின்னணியில் கூறுகின்றீர்கள்? என்பதே இங்கு எழும் முக்கியமான கேள்விகள்.

கோத்தபாயவின் சட்ட ஆலோசகராகவும் பின்னர் நீதிஅமைச்சராகவும் நீங்கள் இருந்த ஆட்சிக் காலம் தான் தமிழ்மக்களது அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட காலம். குறிப்பாக தமிழ்மக்களின் நினைவகத்தில் இன்னும் அழியாத வலியும் வேதனையும் நிறைந்த காலமாகவே உள்ளது. மனித உரிமை மீறல்கள், கட்டாய காணாமல் ஆக்கப்பட்டோர், நீதியற்ற அடக்கு முறைகள் ஆகியவை குறித்த குற்றச்சாட்டுகள் உலக அரங்கில் பல முறை முன்வைக்கப்பட்டன. அந்த அரசின் ஒரு முக்கிய அமைச்சராக இருந்தவர் நீங்கள். அதுவும் நீதித்துறை பொறுப்பை வகித்தவர்.

அந்த காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் ஒலித்தபோது நீதிக்காக அழுகுரல்கள் எழுந்த போது நீங்கள் எடுத்த நிலைப்பாடு என்ன? நீங்கள் உயர்ந்த பதவியில் இருந்தபோது ஏன் இன்றைய போல் துணிவான கருத்துக்கள் வெளியே சொல்லவில்லை? இவை தவிர்க்க முடியாத கேள்விகள்.

இன்று, அதிகாரத்தின் வெளியிலிருந்து மனிதநேயப் பாடங்களைப் பேசுவது எளிது. ஆனால், அதிகாரத்தின் உச்சியில் இருந்தபோது அந்தக் கருத்துக்களை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். அப்போது மௌனம் காத்த நீங்கள், இன்று நீதியின் மொழி பேசும் போது, அது உண்மையான மன மாற்றமா? அல்லது அரசியல் வசதிக்கான உரையாடலா? என்ற சந்தேகம் எழுவது இயல்பானதே.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு அறிவுரை தேவையில்லை. அவர்கள் ஏற்கனவே துன்பத்தின் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். அவர்களுக்கு தேவை நீதியும், பாதுகாப்பும், குரலாக நிற்கும் துணிச்சலான தலைவர்களும் தான். அந்த தலைமை அதிகாரத்தில் இருந்தபோது காணாமல் போய் பின்னர் உரைகளில் மட்டும் தோன்றினால் அது நம்பிக்கையை உருவாக்காது.

உலகம் ஒடுக்குமுறையாளரை எதிர்க்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதற்கு முன், அந்த ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாய் இருந்தவர்கள் தங்கள் மௌனத்தையும் பங்கையும் சுய விமர்சனம் செய்ய வேண்டியது அவசியம். பொறுப்பேற்காத உரைகள், நீதியின் பாதையை மேலும் மங்கலாக்கும்.

இறுதியாக, உண்மையான மாற்றம் வார்த்தைகளில் இல்லை செயல்களில் தான். வரலாறு மறக்காது. மக்களின் நினைவு வலிமையானது. நீதிக்காகக் காத்திருக்கும் ஒரு சமூகத்தின் முன், தாமதமான உண்மைகள் போதுமானதல்ல. நேர்மையான ஒப்புதலும், தெளிவான செயலும் தான் எதிர்காலத்தை உருவாக்கும்.

உங்களது ஆட்சியின் போது தமிழினம் பட்ட துன்பம் ஈரானில் மக்கள் படும் துன்பங்களுக்கு சற்றும் குறைந்தது அல்ல. எங்கள் மக்களும் குண்டு மழைக்கும் பீரங்கித் தாக்குதலுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் செல்லடிக்கும் மத்தியில் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தவர்கள். எனவே அலி அவர்களே வாயால் பேசுவதை விடுத்து நெஞ்சில் கை வைத்து மனச்சாட்சிப்படி பேசக் கற்றுக் கொள்ளுங்கள். காலக்கிழவி கொடுமையானவள். உங்களையும் விட்டு வைக்க மாட்டாள்.

ஈழநாடு

# மாகாணசபை தேர்தல்கள் அரசுக்கு நெருக்குதல் கொடுக்க ஒரு வழி

மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்துவதற்கு தேசிய மக்களசக்தி அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க ஜனநாயக ரீதியான மக்கள் போராட்ட இயக்கம் ஒன்றை முன்னெடுக்கப் போவதாக இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த வருட பிற்பகுதியில் அறிவித்திருந்தார்.

ஆனால் நவம்பர் பிற்பகுதியில் டித்வா சூறாவளியோடு அந்த போராட்டக் கதையும் அடித்துச் செல்லப்பட்டு விட்டது போன்று தெரிகிறது. அதற்கு முன்னதாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் முன்முயற்சியில் மாகாணசபை முறையைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை தமிழ்மக்களுக்கு விளக்கிக்கூறுவதற்காக வடக்கிலும் கிழக்கிலும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து வந்தது. தற்போது அந்த கருத்தரங்குகளையும் காணவில்லை.

தமிழரசு கட்சியையும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியையும் தவிர மற்றைய குறிப்பிடத்தக்க தமிழ்க் கட்சிகள் மாகாண சபைகளைப் பற்றி பெரிதாக அக்கறை காட்டுவதில்லை. பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாகாண சபைகளைப் பற்றி பேசுவதேயில்லை என்றாலும், இறுதியாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்திருந்த வேளையில் மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து அவரைச் சந்தித்த கஜேந்திரகுமார் மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியதாக செய்திகள் வந்தன.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கத்துக்கு அக்கறையில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட ஜனதா விமுக்திபெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டு வரப் போவதாகக் கூறும் புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடு எந்த இலட்சணத்தில் அமையும் என்று எவராலும் சோதிடம் சொல்லமுடியாது.

இத்தகைய ஒரு பின்புலத்தில் மாகாண சபைகள் முறையை அதில் உள்ள குறைபாடுகளுக்கு மத்தியிலும், பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. மாகாண சபைகளுக்கு எந்த முறையின் கீழ் தேர்தல்களை நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழு அதன் முதல் அறிக்கையை மூன்று மாதங்களில் சமர்ப்பிக்கும் என்று அதன் தலைவரான வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் முதலாவது கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்திய கலப்பு முறையில் அன்றி விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவதானால் மாத்திரமே மக்களால் தெரிவாகும் பிரதிநிதிகளிடம் விரைவாக மாகாண நிருவாகத்தை ஒப்படைப்பது சாத்தியமாகும். முன்னைய பாராளுமன்றத்தில் சுமந்திரனும் தற்போதைய பாராளுமன்றத்தில் சாணக்கியன் இராசமாணிக்கமும் இது தொடர்பில் தனிநபர் பிரேரணையின் வடிவில் சட்டமூலம் ஒன்றைச் சமர்பித்தனர்.

சாணக்கியனின் சட்டமூலத்தை நிறைவேற்றி மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு விருப்பமில்லையானால் அது வாகவே அத்தகைய ஒரு சட்டமூலத்தைக் கொண்டு வந்திருக்கலாம். அந்தா நோக்கம் இருந்திருந்தால் அரசாங்கம் தெரிவுக் குழுவை நியமித்திருக்காது. அதனால் விரைவில் தேர்தல்களை நடத்த அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க வழி தான் என்ன?

காலம் தாழ்த்துவதை தவிர்க்க விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்தலை நடத்த வேண்டும் என்று தெரிவுக்குழுவில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டாக வலியுறுத்த வேண்டும். அதற்கு சாதமான பதில் கிடைக்காத பட்சத்தில் தேர்தலை தாமதிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்பதை வெளிப்படையாகக் கூறிவிட்டு வெளியேறுவது அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கான சாத்தியமான ஒரு வழியாக இருக்கலாம்.

# அமெரிக்க அழுத்தங்களுக்கு அமையவே ஈரானிய மாலுமிகளை இலங்கை தடுத்து வைத்திருக்கிறது இந்திய பூகோள ஆய்வாளர்

ஈரானின் 250க்கும் மேற்பட்ட மாலுமிகளைத் திருப்பி அனுப்புமாறு தெஹ்ரான் விடுத்த கோரிக்கையைப் புறக்கணித்து, இலங்கை அவர்களைத் தொடர்ந்து தமது பாதுகாப்பில் தடுத்து வைத்திருக்கிறது. இவ்விடயத்தில் இலங்கை அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு இணங்கி நடப்பதைக் காணமுடிகிறது.

இலங்கையின் தீர்மானம் சட்டபூர்வமாக நியாயப்படுத்தக் கூடியதெனினும், போர்க்காலத்தில் பயிற்சி பெற்ற வீரர்களை ஈரானுக்குத் திருப்பியனுப்ப மறுப்பதனை, அதன் விளைவுகளின் அடிப்படையில் நோக்குகையில் எவ்வகையிலும் நடுநிலையான நகர்வாகக் கருத முடியாது என இந்தியாவின் பிரபல பூகோள அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் பிரம்மா செல்லனே சுட்டிக் காட்டியுள்ளார்.



இலங்கையை அண்மித்த கடற்பரப்பில் கடந்த 4 ஆம் திகதி அமெரிக்க நீர்மூழ்கிக்கப்பல் நடாத்திய தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட ஈரானிய போர்க் கப்பலான ஐ.ஆர்.ஐ.எஸ் டெனாவில் இருந்து மீட்கப்பட்ட 30 க்கும் மேற்பட்ட மாலுமிகள் கொக்கல விமானப் படைத் தளத்திலும், ஈரானுக்குச் சொந்தமான ஐ.ஆர்.ஐ.எஸ் புஷேர் கப்பலில் இருந்து கொழும்புத் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்ட 207 மாலுமிகள் வெலிசர கடற்படை முகாமிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்னமும் ஈரானுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படாத நிலையில் இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் பேராசிரியர் பிரம்மா மேலும் கூறியிருப்பதாவது: அமெரிக்காவினால் மூழ்கடிக்கப்பட்ட ஒரு போர்க்கப்பலில் (ஐ.ஆர்.ஐ.எஸ் டெனா) இருந்து தப்பியவர்கள் உள்ளடங்கலாக 250க்கும் மேற்பட்ட ஈரானிய மாலுமிகளைத் திருப்பியனுப்புமாறு தெஹ்ரான் விடுத்த கோரிக்கையைப் புறக்கணித்து, அவர்களை இலங்கை தொடர்ந்து தமது பாதுகாப்பில் வைத்திருக்கிறது. ஆனால் இதற்கு நேர்மாறாக இந்தியா சுமார் 180 ஈரானிய மாலுமிகளை கடந்த 13 ஆம் திகதி விசேட விமானம் மூலம் ஈரானுக்குத் திருப்பி அனுப்பிவைத்தது.

1907ஆம் ஆண்டு ஹேக் பிரகடனத்தின் சரத்துக்கு அமைவாக இலங்கை மேற்குறிப்பிட்ட தடுத்துவைப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறது. இந்த சர்வதேச சட்டத்தின் பிரகாரம் ஒரு நடுநிலை நாடு தனது எல்லைக்குள் நுழையும் போரில் ஈடுபட்டுவரும் நாடுகளின் இராணுவ வீரர்களை, அவர்கள் மீண்டும் போர்க் களத்துக்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் காவலில் வைக்கமுடியும்.

ஆனால் இங்கு சட்டம் என்பது கதையின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். இலங்கையில் இடதுசாரி சார்புடைய ஜனாதிபதி ஆட்சிபீடத்தில் இருக்கும் போதிலும், நிதிநெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் அந்த நாடு அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு இணங்கி நடப்பதைக் காணமுடிகிறது. ஈரானிய மாலுமிகளைத் திருப்பியனுப்ப வேண்டாம் என வொஷிங்டன் இலங்கையிடம் வலியுறுத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் இந்தத் தீர்மானம் சட்டபூர்வமாக நியாயப்படுத்தக்கூடியதாகவும், அபாயங்களைக் குறைக்கும் வகையிலான ஒரு தந்திரோபாயமாகவும் அமைந்திருக்கும் போதிலும், போர்க் காலத்தில் பயிற்சி பெற்ற வீரர்களை ஈரானுக்குத் திருப்பியனுப்ப மறுப்பதனை, அதன் விளைவுகளின் அடிப்படையில் நோக்குகையில் எவ்வகையிலும் நடுநிலையான நகர்வாகக் கருதமுடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான காலத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நிர்ணயிக்க ஈரான் அனுமதிக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்களத்தில் அமெரிக்காவின் தோல்விகளை மூடி மறைப்பதற்கான முன்மொழிவுகளை வழங்கி பல்வேறு இராஜதந்திர வழிகள் மூலம் பேச்சுவார்த்தை முயற்சிகள் நடக்கின்றன.

2025ஆம் ஆண்டின் வசந்த காலத்திலும் குளிர்காலத்திலும் நடைபெற்ற இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை, அவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக் காட்டி ஏமாற்றுப் பேச்சுவார்த்தைகள் என ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானின் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்வதைப் பொறுத்தே போர் நிறுத்தம் அமையும் என்று ஈரான் தெரிவித்துள்ளது. அதற்கு முன்பு எந்தப் பேச்சுவார்த்தையும் நடைபெறாது டிரம்ப் நினைக்கும் போது போர் முடிவுக்கு வராது, மாறாக அது முடிவுக்கு வர வேண்டும் என்று ஈரான் முடிவு செய்யும் போது தான் வரும்.'' என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

சிங்கள தேசத்தின் மூத்த இரண்டு கட்சிகளும் அவர்களுக்கு வாக்களித்த மக்களாலேயே காணாமலாக்கப்பட்ட வரலாற்றை முன்னர் ஒரு தடவை இங்கு எழுதியிருந்தேன்.

ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திர கட்சியுமே சிங்கள தேசத்தின் ஆதிக்கட்சிகள். இவர்களுக்கு ஏற்பட்ட கதி எவரும் எதிர்பார்க்காதது. ரணில் விக்கிரமசிங்க எழுபத்தைந்து வயதைத் தாண்டியும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைக் கதிரையை விட்டுக் கொடுக்காது கட்டிப்பிடித்திருக்கிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்

லிங்கமும், தமிழ் காங்கிரஸின் மு.சிவசிதம்பரமும் தோற்கடிக்கப்பட்டதால் தமிழர் ஐக்கிய முன்னணி உருவாகியதாக வரலாறு கூறுகிறது. இதுவே பின்னாளில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாகி, தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து அதிகூடிய ஆசனங்களை வடக்கு கிழக்கில் பெற்றது. .தன் பின்னரான நிகழ்வுகள் சரித்திர பாடமாகியுள்ளது.

தொடர்ச்சியான அனைத்து மாற்றங்களையும் காலத்தின் தேவையாக மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதேசமயம் தமிழ் மக்கள் மத்தியில்

யும் ஒன்றிணைக்க முடியாதவரை தமிழரசுக் கட்சி பிளவுண்ட நிலையிலேயே செல்லுமென உள்வீட்டுக்காரர்கள் ஏற்றுக் கொண்டாலும் சகஜ நிலைமையை ஏற்படுத்துவதில் எவருமே வெற்றி காணும் நிலை தென்படவில்லை. உருவாகியுள்ள பதவி மோகப் பிரச்சனையை தீர்த்து கட்சியை நேர்த்தியாகக் கொண்டு செல்ல வேண்டிய பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இவ்விடயத்தில் அக்கறை காட்டுவதாக இல்லையென்ற குறைக்கப்பால், சுமந்திரன் பக்கமாகவே இவர் சாய்ந்திருப்பதான ஒரு குற்றச்

ங்களை பெரிதாக்கி ஊடகங்கள் ஊடாக அறிக்கை விடுத்து, உறுப்பினர்களிடம் விளக்கம் கோருவதும், உறுப்புரிமையை இடை நிறுத்தம் செய்வதும் கட்சியை சீரழித்து



# தடுமாறுகிறது தமிழ் அரசியல்! தள்ளாடும் தமிழரசு!

தலைவர் யார் என்பது பலருக்கும் தெரியாமல் இருக்கிறது. சந்திரிகா குமாரதுங்கதான் இப்போதும் தலைவராக இருப்பதாக பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்விரு கட்சிகளையும் ஓரந்தள்ளி விட்டு ஜே.வி.பி., தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சியைக் கைப்பற்றி இரண்டாவது ஆண்டு பூர்த்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. சிறீமாவோ அரசினாலும் (1971), ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசினாலும் (1987-1989) பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்ட ஜே.வி.பி.,





முன்னைய இரண்டு கட்சிகளை மட்டுமன்றி மகிந்தவின் பொதுஜன பெரமுனவையும் வீழ்த்தி விட்டு ஆட்சியில் அமர்ந்துள்ளது.

நெருக்கடியான வளைகுடா யுத்த வேளையில் இந்தியா, சீனா, ரஷ்யா மட்டுமன்றி ஈரானும் கூட இவர்களுக்கு சகல உதவிகளையும் வழங்க முன்வந்திருப்பதை பார்க்க முடிகிறது. ஊழல், அதிகார துஸ்பிரயோகம் என்பதற்கு அப்பால் நல்லுறவு என்ற ஒற்றை வார்த்தை அநுர அரசுக்கு சாதகமாக அமைந்துள்ளது.

இதனூடாக தமிழர் தேசிய அரசியலை நோக்கும் போது அதன் போக்கு தமிழ் மக்களின் நலனில் அக்கறை காட்டுவதை விட தங்களுக்குள் பிசகுப்பட்டு கழுத்தறுப்புகள் நடத்துவதிலேயே காலத்தைக் கடத்துவதை காணமுடிகிறது.

ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் எவ்வாறு சிங்கள தேசத்தின் மூத்த கட்சிகளாகப் பார்க்கப்படுகின்றனவோ அந்தப் பாரம்பரியம் தமிழரசுக் கட்சிக்கும் உண்டு. தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்தவர்களால் உருவாக்கப்பட்டது தமிழரசுக் கட்சி. தேர்தல் திணைக்களப் பதிவில் .லங்கை தமிழரசுக் கட்சி என்றும், தமிழ் மக்கள் மத்தியில் சமஷ்டிக் கட்சி என்றும் பெயர் சூட்டப்பட்டதற்கு அரசியல் காரணம் உண்டு.

இது உருவாக்கப்பட்ட காலத்தில் அதன் கொள்கையால் மக்கள் ஆதரவு .தன் பலமாகியது. ஆனாலும் தமிழ் காங்கிரஸை முழுமையாக அழித்துவிட முடியவில்லை. 1970 பொதுத் தேர்தலில் தமிழரக் கட்சியின் அமிர்த

பிளவுகள் அதிகமாகி கொள்கைப்பற்று சிதறுண்டுபோன வேளையில் அனைத்துத் தமிழ் கட்சிகளையும் ஆயுதக் குழுக்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவர வேண்டிய தேவை உருவானது. விடுதலைப் போராட்டத்துக்கு தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் இதனை வெற்றிகரமாக நிறைவேற்றினர். தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற வகையிலும் அதன் சின்னமான வீடு கூட்டமைப்பின் சின்னமாக்கப்பட்டதாலும் தமிழரசுக் கட்சிக்கு கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தலைமைத்துவம் கிடைத்தது.

2009ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதால் கூட்டமைப்பு மெதுமெதுவாக பிளவடைய ஆரம்பித்தது. அதன் பின்னரான சகல தேர்தல்களும் இந்தப் பிளவை வெளிப்படையாகத் தெரிய வைத்தன. எனினும், வெற்றி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கையில் தமிழரசே முன்னணியில் நின்றதால் அதன் தலைமைத்துவம் மாற்றமின்றித் தொடர்ந்தது.

தமிழர் தேசத்தின் இன்றைய அரசியல் நிலைமை அவ்வாறே இருக்கிறதா? தமிழரசுக் கட்சி அந்தத் தலைமைப் பதவியை தொடர்ந்தும் தக்க வைக்கும் தகுதியில் இருக்கிறதா? அண்மையில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகளும், அதன் பின்னரும் முன்னருமான தேர்தல் கூட்டுகளும் அவ்வாறான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவில்லையென்றே கூற வேண்டும்.

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பதவிப் போட்டிகளும், கழுத்தறுப்புகளும் இதற்கான முதற் காரணமாக அடையாளம் காணப்படுகிறது. இறுதியாக, இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும் அதன் பின்னரான தமிழரசுக் கட்சியின் தலைவர் போட்டியிலும் சுமந்திரனுக்குக் கிடைத்த தோல்வியே கட்சியை இன்றைய தேக்க நிலைக்கு அல்லது மீளமுடியாத நெக்கடிக்குள் சென்று கொண்டிருப்பதற்கு முக்கியமான காரணம் என்பதை கட்சிப் பிரமுகர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

சுமந்திரனையும் சிவஞானம் சிறீதரனை

சாட்டு பொதுவெளியில் உண்டு. எல்லாம் நியதிப்படி நடைபெறும் என்பது .வரது போக்கு இப்போதைய கட்சிப் பிரச்சனைக்கு தீர்வாக அமையாது என்பதை அன்றாட நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன.

கட்சியை முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் சுமந்திரன் தீவிரமாக உள்ளார். அதற்கு ஏதுவாக அவரது அன்றாட செயற்பாடுகள் காணப்படுகின்றன. கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவராக விருந்த சிறீதரன் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டபின் சுமந்திரனின் நெருக்கமான சகாவான சாணக்கியன் அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். சாணக்கியன் றிமோட்டில் இயங்குவதாக பரவலாக சொல்லப்படுகிறது. இதில் உண்மையில்லாமல் இல்லை.

கொழும்பிலுள்ள கனடிய தூதுவரை சாணக்கியன் அண்மையில் தனிமையில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு அவரது தனிப்பட்ட முறையிலானது என்று வெளியில் பகிரப்பட்டது. கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவராக இருப்பவர் ஒரு வெளிநாட்டுத் தூதுவரை சந்திப்பது எவ்வாறு தனிப்பட்ட சந்திப்பாக இருக்க முடியும்? .தனை ஒரு தனிப்பட்ட சந்திப்பென்று முற்கூட்டியே அறிவித்திருந்தால் வெளிநாட்டுத் தூதுவர் இவரை சந்தித்திருப்பாரா? சிலவேளை சிறீதரன் இவ்வாறான ஒரு சந்திப்பை நடத்தியிருந்தால் அவர் மீது கேள்விக்கணை தொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் சாணக்கியனுக்கு....

வளைகுடா யுத்தம் தொடர்பாக அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியது. இது தொடர்பாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்போம் என பதில் செயலாளர் சுமந்திரன் அறிவித்துள்ளார்.

வளைகுடா யுத்தம் ஆரம்பமாகி இரண்டு வாரங்களின் பின்னரே பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தனது தீர்மானத்தை எடுத்தது. தமிழ் மக்களின் தலையாய கட்சி என்று தன்னை அழைத்துக் கொள்ளும் தமிழரசுக் கட்சி யுத்தம் ஆரம்பமாகி ரண்டு வாரங்களாகியும் தனது நிலைப்பாட்டை அறிவிக்காதது யாருடைய தவறு? கட்சி தனது முடிவை ஏற்கனவே அறிவித்திருந்தால் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தனது நிலைப்பாட்டை தவிர்த்திருக்கலாம் தானே.

ஓர் அரசியல் அமைப்பு என்பது எப்போதும் கூடுதலானவர்களை அரவணைத்து கட்சியை வளர்த்துச் செல்வதாக இருக்க வேண்டும். கட்சிக்குள் தீர்க்கப்பட வேண்டிய விடய

அழிப்பதாகவே அமையும். .தனையே தற்போதை தமிழரசின் தலைமைத்துவம் தனது தலையாய பணியாக செய்து வருகிறது.

இன்னொரு விடயம் முக்கியமானது. திருமலை புத்தர் சிலை விடயத்தில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

மேற்கொண்ட நிலைப்பாடு தமிழர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது என்று தமிழரசுக் கட்சி அவருக்கு தெரிவித்துள்ளது.

அதாவது, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை தமிழரசுக் கட்சி பகிரங்கமாக ஆதரித்து பரப்புரை செய்ததால் அவரது செயற்பாடு தமிழர்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி விட்டதென்பது இதன் அர்த்தம். அதனால் சஜித் தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டுமென தமிழரசுக் கட்சி கோரியுள்ளது.

இது நியாயமான கோரிக்கை. அதற்கு முன்னர், ஆயிரம் விகாரைகளை வடக்கில் அமைப்பேன் என்று கூறிய சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்ததற்காகவும், தமிழ் மக்கள் அவருக்கே வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று கோரியதற்காகவும், தமிழ் மக்களின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட அரியநேத்திரனை தோற்கடிக்க வேண்டுமென பகிரங்கமாக வேண்டியதற்காகவும் தமிழரசுக் கட்சியும் சுமந்திரனும் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்பதை ஏனோ இவர்கள் மறந்துவிட்டார்கள்.

தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பற்றி பேசித் தீர்ப்பதற்காக இராப் போசனத்துக்கு வருமாறு தமிழரசுக் கட்சியினரை சஜித் பிரேமதாச அழைத்திருப்பதாகவும் அதனை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் இன்னொரு செய்தி சொல்கிறது. நக்குண்டார் நாவிழந்தார் என்பதை தலைமைக் கட்சிக்காரர்கள் நினைவில் கொண்டு செயற்பட வேண்டியது அவசியம். இல்லையேல் இராப்போசனத்துக்காக இன்னொரு நாளில் தமிழ் மக்களிடம் தமிழரசுக் கட்சி மன்னிப்புக்கோர நேரிடலாம்.

மொத்தத்தில் ஒரு விடயம் பளிச்செனவே தெரிகிறது. தமிழ்த் தேசிய அரசியல் திசை தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கிறது. இதன் தலைப்பான தமிழரசுக் கட்சி தள்ளாடிக் கொண்டிருக்கிறது. சிங்கள தேசத்தில் நிகழ்ந்த அதிரடி அரசியல் மாற்றம் தமிழ் மண்ணில் எப்போது சாத்தியமாகும்?

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

28 மார்ச் 2026 முதல் 03 ஏப்ரல் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம்

இறுப்பிட்டி புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தலையாட்டி வேலணையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 29 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு பிறேம்குமார்

யாழ்ப்பாணம் அரியாலைப் பிறப்பிடமாகவும் கனடா வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாள் 23 மார்ச் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பிள்ளைகளும் துணைவியாரும் மற்றும் உறவுகளும் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு பிறேம்குமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம்

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 09 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய எட்டாவது ஆண்டு நினைவு நாள் 19 மார்ச் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னையா நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களுடைய 16வது ஆண்டு நினைவு நாள் 30 மார்ச் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னையா நல்லதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதிஇல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனனி நிர்மலகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஜெனனி தனது பெற்றோர்கள் சகோதரத்துடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




23 மார்ச் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜன் கௌசிகா இணையர்களது ஏழாவது ஆண்டு இருமன இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




23 மார்ச் 2026 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பிறேம்குமார் முருகேசு அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை இறுப்பிட்டி புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தலையாட்டி வேலணையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி நவரெட்ணலிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 மார்ச் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அம்சயன் ஸ்ரீகுமாரின் 16வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அம்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




30 மார்ச் 2026 திங்கட்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




30 மார்ச் 2026 திங்கட்கிழமை இணுவிலைச் சேர்ந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



# நமது அரசியல்:- சிரிக்கவும் சிந்திக்கவும்

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யதீந்திரா -



முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான அரசியல் எவ்வாறு அமையக் கூடும் என்று இந்தக் கட்டுரையாளரிடம் ஒரு பார்வையிருந்தது. அதாவது ஆண்டுகள் தோறும் ஒப்பாரி வைத்து விட்டு ஓராண்டு முழுவதும் ஒய்வெடுத்துக் கொள்வது. இந்த அவதானிப்பு முற்றிலும் சரியென்பதே இதுவரை யில் நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர் கலாநிதி ஜெய்மகேஸ்வரன் கூறியதாக ஒரு விடயத்தை வாசிக்கக் கிடைத்தது –

அதாவது, பாலா அண்ணன் இறுதி வரையில் கல்லறைகளுக்கு வெள்ளையடித்து விட்டு மன வருத்தத்தோடு இறந்து போனார். இப்போது நமது அரசியல்வாதிகள் வருடம் ஒரு முறை விடுதலைப்புலிகளின் கல்லறைகளுக்கு முன்னால் பக்தியோடு நிற்கின்றனர். மகேஸ்வரன் வேறு யாருமல்ல, விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் ஒஸ்லோ பேச்சு வார்த்தையில் பங்கு கொண்டவர்களில் ஒருவர்.

பாலசிங்கம் தலைமையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் பங்கு கொண்ட மற்றவர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன். மகேஸ்வரன் தற்போது ஒரு சாமியாராக இருப்பதாக கேள்விப் பட்டிருக்கின்றேன்.

சமாதான பேச்சுவார்த்தைக் காலத்தில் மகேஸ்வரன் திருகோணமலைக்கும் வந்திருக்கின்றார். எட்ட இருந்து பார்த்திருக்கின்றேன். இன்று திரும்பிப் பார்த்தால் – நாங்கள் ஒரு விண்ணர் சமூகம் எங்களால் இந்தியாவை கையாள முடியும், அமெரிக்காவை கையாள முடியும் ஏன் முழு உலகமும் எங்களைத் தான் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றது என்றெல்லாம் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்த போது, இறுதியில் எல்லோருமே எங்களுக்கு மொட்டை அடித்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி விட்டு எதுவுமே நடக்காதது போன்று சென்று விட்டனர்.

இவ்வாறு கூறுகின்ற போது உடனே மீசையை முறுக்க வேண்டும் போல் தோன்றலாம் அவர்களை நாசகார சக்திகள், ஏகாதிபத்திய சக்திகள் என்று திட்டித் தீர்க்க வேண்டும் போல் எண்ணம் மேலிடலாம்.

அப்படியெல்லாம் பேசுபவர்கள் நம் மத்தியில் இப்போதும் உண்டு. ஆனால் வானத்தை நோக்கி எச்சில் உமிழ்வதால் இறுதியில் அசிங்கமாகப் போவது நமது முகம் மட்டும் தான்.

ஏனெனில் உலகின் அதிகார சக்திகளின் அணுகுமுறை நேற்று எப்படியோ, நாளையும் அப்படித் தான் அது எப்போதும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும். நாம்தான் நிலைமையை கணித்து அதற்கேற்ப நமது நலன்களை அடையும் வழியை அறிய வேண்டும்.

ஏனெனில் கொடுப்பதற்கு எதுமில்லை என்றால் பெறுவதைப் பற்றி யோசிக்க முடியாது என்பதை விதியாகக் கொண்ட உலகில் எவர் மீதும் குற்றம் சாட்டுவதில் பயனில்லை. உங்களுடைய நலன்கள் எங்களுக்கு பெரிதென்று நாங்கள் எண்ணும் போது, மற்றவர்கள் தங்களின் நலன்களை நிறுத்துத் தானே செயற்படுவார்கள். ஆனால் இதிலுள்ள நகைச்சுவை என்னவென்றால் இப்போதும் இந்தியாவை எவ்வாறு கையாளுவது. அமெரிக்காவை எவ்வாறு கையாளுவது என்று சிலர் வகுப்பெடுத்துக் கொண்டிருப்பது தான்.

கடந்த பதினாறு ஆண்டுகளாக இடம் பெற்ற அரசியல் உரையாடல்களை சற்று திரும்பிப் பார்த்தால், கோடம்பாக்க நகைச்சுவை நடிகர் வடிவேலு தோற்று விடுவார். அந்தளவிற்கு சர்வதேச அரசியல் தமிழர் பகுதிகளில் தெருவெங்கும் தலைவிரித்தாடியிருக்கின்றது.

2010 பொதுத் தேர்தலின் போது, அப்போது கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் திருகோணமலை நகரில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசுகின்றார். பிராந்திய வல்லரசான இந்தியா எங்களோடு இருக்கின்றது. உலக வல்லரசான அமெரிக்காவும் எங்களோடு இருக்கின்றது. சம்பந்தன் பொதுவாக பேசுவதற்கு முன்னர் சபையை நன்றாக உற்று நோக்கிக் கொள்வார்.



அதாவது குறித்த சபையில் இருப்பவர்கள் அனைவரும் மடையர்களா அல்லது யாராவது விசயமுள்ளவர்கள் இருக்கின்றார்களா என்று பார்த்துக் கொள்வார். அந்தக் கூட்டத்திலும் அப்படித் தான் சம்பந்தன் பேசினார். அவர் அவ்வாறு கூறியபோது கரகோசம் எழுந்தது. சற்று எட்டத்திலிருந்து இதனை கேட்டுக் கொண்டிருந்த எனக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை. சம்பந்தன் இவ்வாறு அடிக்கடி கூறுவதுண்டு.

ஒருமுறை யாரோ ஒருவர், (வரதராஜப் பெருமாளாக இருக்க வேண்டும்) இந்தியா பின்னாலிருந்து முதுகா சொறிந்து கொண்டிருக்கின்றது என்று பேசியதாக ஒரு செய்தியை பார்த்த போதும் சிரிப்பு வந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழர் அரசியலில் வன் சக்தி மென் சக்தி பற்றிய உரையாடலொன்று இடம் பெற்றிருந்தது, இதனை பலர் இப்போது மறந்துமிருக்கலாம். இதனை அப்போது கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுமந்திரன் தான் முதலில் உச்சரித்ததாக நினைவு. பின்னர் அது பற்றி ஆய்வுகள் வெளிவந்தன.

இது பற்றி எழுதாவிட்டால் நமக்கு மரியாதையில்லையே என்னும் அடிப்படையில் ஒரு கட்டுரையை நானும் எழுதியிருந்தேன். அந்தக் கட்டுரை வெளி வந்த பின்னர் ஒரு ஆய்வாளர் தொடர்பு கொண்டு, நீங்கள் யாரோ ஒரு வெள்ளைக்காரனை மேற்கோள் காட்டி எழுதியிருக்கின்றீர்கள் பரவாயில்லை நல்லா எழுதியிருக்கின்றீர்கள் என்றார். அப்போது தான் எனக்கு ஒன்று விளங்கியது.

இங்கு சர்வதேச அரசியல் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் எவருமே தங்களுக்கு வெளியில் என்ன நடக்கின்றது என்பதையே படிப்பதில்லை. ஏனெனில் இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், அந்த ஆய்வாளர் யாரோ ஒருவர் என்று கூறிய, அந்த வெள்ளைக்காரர் தான் மென் சக்தி என்னும் கோட்பாட்டையே உருவாக்கியவர். அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான பேராசிரியர் ஜோசப்சாமுவேல் நை 2004இல் எழுதிய மென் சக்தி (Soft Power: The Means To Success In World Politics) தொடர்பான நூலிலிருந்து தான், அமெரிக்க சிந்தனைக் கூடங்களின் மத்தியில் இது ஒரு உரையாடலானது.

அமெரிக்காவின் மூன்று அரசாங்கங்களின் கீழ், ராஜாங்கத் திணைக் களத்தில் முக்கிய பொறுப்புக்களிலும் ஜோசப் நை இருந்திருக்கின்றார். இதிலுள்ள அடிப்படையான விடயம், வன் சக்தி, மென்சக்தி என்னும் உரையாடல் அரசுகளுக்குரியது. அதிலும் பலம் வாய்ந்த நாடுகளுக்குரியது. குறிப்பாக அமெரிக்காவின் நலன்களை இராணுவ வழி முறைகளில் மட்டுமல்ல அதற்கு மாற்றாக மென் சக்தி அணுகுமுறைகளிலும் அடைய முயற்சிப்பது தொடர்பானது. ஜோசப் நையின் வார்த்தையில் கூறுவதானால், யுத்தத்தில் இராணுவம் வெல்லும் யுத்தமற்ற சூழலில் நமது உரையாடல்கள் வெல்லும் (வெல்ல வேண்டும்) பலம் பொருந்திய குறிப்பாக அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் இது ஒரு முக்கிய உரையாடலாக இன்றும் இருக்கின்றது.

சுமந்திரன் இந்த விடயங்களை அறிந்து பேசினாரா அல்லது யாரோ கூறக் கேட்டுப் பேசினாரோ நான் அறியேன் ஆனால் இப்போது திரும்பிப் பார்த்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருவதற்கே இன்னொரு நாட்டின் ஆசீர்வாதம் தேவைப்படுகின்ற நிலையில், நமது அரசியல் சமூகம், வன்சக்தி மென்சக்தி பற்றி உரையாடியதை எண்ணினால் சிரிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். ஒரு வகையில்

சுமந்திரன் போன்றவர்கள் மென் சக்தியை அணுகும் ஆற்றலைக் கொண்டிருந்தால், சுமந்திரன் தென்னிலங்கையை நோக்கி முன் வைத்த அரசியல் உரையாடல் வெற்றி பெற்றிருக்க வேண்டுமல்லவா! இது போன்று தான் சுமந்திரன் தலைமையில் மூவர் அடங்கிய குழுவொன்று வோசிங்டன் சென்று திரும்பிய பின்னர் ஏற்பட்ட ஆர்பாட்டங்களும், அதன் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும் இப்போது திரும்பிப் பார்த்தால் சிரிக்க வேண்டும் போல் இருக்கின்றது.

அந்த மூவரில் சுமந்திரன் தவிர்ந்த இருவர் ஏன் அந்தக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டனர் என்னும் கேள்விக்கு இன்று வரையில் பதில் கிடைக்கவில்லை.

ஏனெனில் அதன் பின்னர் குறித்த இருவரும் எங்கும் அதற்காக பணியாற்றியதாகத் தெரியவில்லை. குறித்த பயணத்தின் பின்னர் அமெரிக்கா கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறப்பட்டது இதனை சுமந்திரன் இப்போது நினைத்துப் பார்ப்பாரோ தெரியவில்லை

ஆனால் தங்களுடைய கூற்றுக்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி அரசியல்வாதிகள் எண்ணிப் பார்க்க வேண்டும், தங்களை அரசியல் ரீதியில் நிறுத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். அமெரிக்கா ஏன் ஈழத் தமிழர்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்?

இந்த கேள்வியின் அடிப்படையில் சிந்தித்திருந்தால் அமெரிக்கா தொடர்பில் அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமிருக்காது. இதே போன்று தான் செல்வம் அடைக்கலநாதன் யாரோ கூறியதைக் கேட்டு இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுத முற்பட்டார். அது தவறான விடயம் அல்ல ஆனால் இறுதியில் தங்களுக்குள் மல்லுக்கட்டி, ஒருவாறு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது

ஆனால் இந்தியத் பிரதமர் கடிதத்தை பார்ப்பதற்கு முன்னர் யாழ்ப்பாண பேருந்து தரிப்பிடத்தில் வெற்றிலை சம்பித் துப்பிக் கொண்டிருப்பவர் அந்தக் கடிதத்தை படித்து விட்டார். தமிழ்அரசியல்வாதிகள் ராஜதந்திர நடைமுறைகளில் ஞானசூனியங்கள் என்பதே இறுதியில் அம்பலமானது.

இவ்வாறான கதைகளின் அடிப்படையை நோக்கினால் ஒரு விடயம் தெளிவாகும். நம்மை நமக்குத் தெரியாமை தான், நமது பல அறியாமைகளுக்கு காரணமாகின்றது. தமிழர் அரசியல் ஜனநாயகவாதிகளால் கட்டுப்படுத்தப்பட்ட காலத்திலும் சரி, பின்னர் ஆயுதங்களால் கட்டுப்படுத்தப்பட்ட காலத்திலும் சரி – நாம் யார்? நமது ஆற்றலின் எல்லை எது? நாம் எவ்வாறானதொரு அயலக அரசியல் சூழலால் நிர்பந்திக் கப்பட்டிருக்கின்றோம்? (நிர்பந்தம் என்பது எப்போதுமே நமது விருப்பங்களுக்கு அப்பாற்றப்பட்டது தான்). என்பதை புரிந்து கொண்டு செயற்படத் தவறிய தன் விளைவே, இன்றைய நிலைமை.

இன்றைய நிலைமைக்கு எவர் மீதும் விரல் நீட்ட முடியாது. ஒரு வேளை கட்டாயம் ஒருவர் மீது, விரல் நீட்டத் தான் வேண்டும் என்றால், நாம் நம் மீது மட்டும் தான் விரல் நீட்ட முடியும். நேற்றும் நமது நிலைமைக்கு நாம் தான் காரணம், இன்றும் நமது நிலைமைக்கு நாம் தான் காரணம், நாளைக்கும் நாம் தான் காரணமாக இருப்போம்.

# நடுநிலைக்கு வந்த சோதனை!

இந்தியப் பெருங்கடலில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை தீவுக்கு அவ்வப்போது சோதனை வருவதுண்டு.

1971ஆம் ஆண்டு இந்திய- பாகிஸ்தான் போர் நடந்த போது பாகிஸ்தான் போர் விமானங்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பிச்





சென்றன. அப்போது இது சர்ச்சைக்குரிய விடயமாக காணப்பட்டது.

இந்தியாவின் அண்டை நாடான இலங்கை அந்தப் போரின் போது பாகிஸ்தான் போர் விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பி செல்வதற்கு வசதி செய்து கொடுத்தது, பக்க சார்பான நிலைப்பாடாக கருதப்பட்டது.

பிராந்தியத்தில் உள்ள இரண்டு நாடுகள் மோதிக்கொண்ட அந்த போரில், இலங்கை நடுநிலை பாத்திரத்தை வகிப்பதற்கு தவறியிருந்தது. அதற்கு முன்னதாக, 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் சர்வதேச நாடுகளிடம் இராணுவ உதவி கோரியது. அப்போது, உடனடியாக பாகிஸ்தான் உதவ முன்வந்தது.

தனது படையினரை அனுப்பி விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை பாதுகாக்க ஏற்பாடு செய்தது. அது தவிர ஏனைய இராணுவ உதவிகளையும் வழங்க முன்வந்தது பாகிஸ்தான்.

இதற்கு பின்னரே இந்தியா கூர்க்கா படைப்பிரிவை சேர்ந்த 150 படையினரை கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்புக்காக அனுப்பி வைத்தது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பில் ஈடுபட்ட இலங்கை படையினர் வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

மேலும் ஜே.வி.பி. கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு படையினரையும் ஆயுதங்களையும் எடுத்துச் செல்வதற்கு, ஆறு செடெக் ஹெலிகொப்டர்களை இந்தியா வழங்கி உதவியது.

அந்த ஆயுதக் கிளர்ச்சியின் பின்னால் வட கொரியாவே இருந்ததாக கூறப்பட்ட நிலையில், வட கொரியாவில் இருந்து கப்பல் மூலம் ஆயுதங்கள் கொண்டு வரப்படுவதை தடுப்பதற்காக, இந்தியா தனது ஐ.என்.எஸ். கங்கா, ஐ.என்.எஸ். கோமதி, ஐ.என்.எஸ். கோதாவரி என மூன்று போர்க்கப்பல்களை அனுப்பி இலங்கையை சுற்றி ஒரு வேலியை அமைத்திருந்தது.

ஜே.வி.பி. கிளர்ச்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு பல மாதங்களுக்கு பின்னர், அதே ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிக்கொண்டன.

கிழக்கு பாகிஸ்தானை விடுவித்து பங்களாதேஷை சுதந்திர நாடாக உருவாக்குவதற்கு நடத்தப்பட்ட போர் அது. அந்த போரில், பாகிஸ்தான் விமானப்படையின் விமானங்களால், இந்தியாவை கடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது, பாகிஸ்தான் விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கி எரிபொருள் நிரப்பிக் கொண்டு பங்களாதேஷ் நோக்கி சென்றன.

சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு, பாகிஸ்தான் உடனடியாக இராணுவ உதவிகளை அனுப்பி வைத்ததற்கு கைமாறாகவே, அந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அப்போது, இந்தியாவும் உதவி செய்திருந்தது. ஆனால் இந்தியாவின் உதவியை விட அவர் பாகிஸ்தானின் உதவியை அதிகமாக நம்பினார். இது இந்தியாவுக்கு எப்போதும் நெருடலான ஒரு விடயமாகவே இருந்து வந்தது.

அதனால் தான் இப்போது இந்தியா முதலில் வந்து உதவுகின்ற தீர்மானத்தை எடுக்கிறது. இலங்கைக்கு அருகே இடம்பெறுகின்ற அனர்த்தங்களின் போது அல்லது விபத்துக்களின் போது உடனடியாக இந்தியா முதல் ஆளாக உதவிக்கு வருகிறது.

அயல்நாட்டுக்கு முன்னுரிமை முதலிடம் என்ற இந்தியாவின் கொள்கை இதன் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது.

அயல்நாடுகளில் பாகிஸ்தான் அல்லது பிற நாடுகள் தலையீடு செய்வதை தடுப்பதையே, இந்தியா பிரதான நோக்கமாக கொண்டிருக்கிறது. ஆனால், இலங்கை தனது வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிக்கல்கள் இருந்திருக்கின்றன.

ஈரானிய போர்க்கப்பல் விவகாரத்தில் இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியத் தரப்பு வரவேற்றிருந்தது நினைவிருக்கலாம். இந்தியா தீர்க்கமாக செயல்படவில்லை என்றும் உடனடியாக உதவவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

எனினும், ஈரானின் மூன்று போர்க்கப்பல்களில் ஒன்றான ஐ.ஆர்.ஐ.எஸ். லாவன், அமெரிக்காவின் தாக்குதலுக்கு முன்னரே கொச்சி துறைமுகத்துக்கு சென்று விட்டது. மற்றைய இரண்டு கப்பல்களில் ஒன்றே அமெரிக்காவினால் குறி வைக்கப்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் மூன்று கப்பல்களையும் இந்தியா தனது துறைமுகத்திற்குள் அனுமதித்திருந்தால், இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்காது.

அதேவேளை இலங்கையிடம் அனுமதி கோரப்பட்டதாகவும் அதற்குள் தாக்குதல் நடந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக வரும் தகவல்கள் குழப்பமானவை.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளியிட்ட தகவல்களின் படியும், பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட தகவல்களின்படியும், ஈரானிய கப்பல்கள் மூன்றும் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவதற்கு அனுமதி கோரியது, மார்ச் 9ஆம் திகதி தொடக்கம் 13-ஆம் திகதி வரையுமாகும். அந்த அனுமதி கோரப்பட்டது பெப்ரவரி 26 ஆம் திகதி.

கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கு பின்னரே அந்தக் கப்பல்கள் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி கோரியிருந்தன. அதற்குள் மார்ச் 4ம் திகதி ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட மற்றைய கப்பலை இலங்கை பொறுப்பெடுத்துக் கொண்டது.

உடனடியாக இலங்கை கடற்படை விரைந்து சென்று மீட்பு பணிகளை மேற்கொண்டது. ஆனால், இந்தியா அதற்கு உதவவில்லை என்ற குற்றச்சாட்டு இந்தியாவில் பரவலாக கூறப்பட்டது.

ஆனால், ஒரு ஈரானிய கப்பலை அது தார்மீக அடிப்படையில் பாதுகாத்திருந்தது. அதில் இருந்த 133 மாலுமிகளையும் பத்திரமாக ஈரானுக்கு திருப்பி அனுப்பி விட்டது.


இந்த விடயத்தில் இந்தியாவின் கொள்கையை இலங்கை பின்பற்றவில்லை. இந்த விடயத்தில் இந்தியாவுடன் கலந்தாலோசிக்கவில்லை. அவ்வாறு கலந்தாலோசனை நடத்தியிருந்தால் இலங்கைக்கு அருகே இந்த சம்பவம் இடம் பெறாமல் தடுத்திருக்கலாம் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்த விடயத்தில், இந்தியாவை பின்பற்றி இலங்கை செயல்படவில்லை என்பது உண்மை.

அப்படி செயற்பட்டிருந்தால் உயிர் தப்பிய ஈரானிய மாலுமிகளில் ஒரு பகுதியினரையாவது, மனிதாபிமான அடிப்படையில் இலங்கை திருப்பி அனுப்பியிருக்க முடியும். உயிரிழந்த கடற்படை மாலுமிகளின் சடலங்களுடன், சென்ற விமானத்தில் இலங்கையிலிருந்து ஈரானிய மாலுமிகளை அனுப்பி வைத்திருக்க முடியும்.

அதை இலங்கை செய்யவில்லை. அதனால் இந்தியா தனது நாட்டில் பாதுகாப்பில் இருந்த 133 மாலுமிகளை அந்த விமானத்தில் ஏற்றி அனுப்பியது

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்தியாவுடன் ஒரே அணுகுமுறையை கையாளுவதற்கு இலங்கை தயாராக இல்லை. இந்த விடயத்தில் முரண்பட்டு நிற்கிறது இந்த விவகாரத்தில், இலங்கையின் இராஜதந்திரம் அல்லது வெளியுறவுக் கொள்கை வேறுபட்டதாகவே இருக்கிறது.

பாகிஸ்தான் — இந்தியா போரின் போது வெவ்வேறான உபாயங்கள் கையாளப்பட்டதை போலவே, இப்போதும் கையாளப்படுகிறது.

ஈரானும் அமெரிக்காவும் நெருங்கிய நட்பு நாடுகளாக இருந்தாலும், அமெரிக்காவுடனான உறவுகளைப் பாதுகாப்பதற்கே இலங்கை முன்னுரிமை கொடுக்கிறது. அதேவேளை, 1971இல் சிறிமாவோ இந்தியா- பாகிஸ்தான் போரின் போது பாகிஸ்தான் போர் விமானங்களுக்கு அனுமதி அளித்தது போல, இப்போது இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் ஒன்று வந்தால் நிச்சயமாக இலங்கை, பாகிஸ்தானுடன் நிற்காது.

ஏனென்றால் பாகிஸ்தானை விட இந்தியா இப்பொழுது சர்வதேச அளவில் வல்லமை பெற்றிருக்கிறது. அது போலத் தான் அமெரிக்கா இப்போது, சர்வதேச அளவில் வல்லமை பெற்றிருப்பதால், அதன் மீது இலங்கை நம்பிக்கை வைக்கிறது. அதனுடன் முரண்பாட்டை ஏற்படுத்தாமல் இருக்கிறது.

இலங்கையை பொறுத்த வரையில் உறவுகளை தீர்மானிக்கின்ற விடயத்தில், யார் வலுவானவர்கள் என்பதை பொறுத்தே தீர்மானம் எடுக்கப்படுகிறது.

இந்தியா பிராந்தியத்தில் முதல் நிலை பெற்றிருப்பதால் அதனை பகைத்துக் கொள்ளாமல் அதனுடன் இசைந்து போகிறது.

இது நடுநிலையான வெளியுறவு கொள்கை அல்ல. சந்தர்ப்பவாத கொள்கை. ஆனால், இதனைத் தான் நடுநிலையானது என்று நிரூபிக்க முற்படுகிறது அரசாங்கம்.

## தேசிய அளவில் முதலிடம் பெற்று சாதனை....

(3ம் பக்கத் தொடர்ச்சி) மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.முரளிதரன் ஆகியோரைப் பாடசாலை அதிபர் ஐ.நிமல்ராஜ் வரவேற்றார்.இப்பாடசாலையைச் சேர்ந்த மாணவன் தெ.திருக்குமரன் கணிதப் பிரிவில் தேசிய நிலையில் சாதனை படைத்துள்ள அதேவேளை, உயிரியல் பிரிவில் ஆ.கிரிஷேந்த் மற்றும் வர்த்தகப் பிரிவில் க.மதுமினி ஆகியோர் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தச் சாதனை மாணவர்களை ஆளுநர் பாராட்டியதுடன், இவர்களின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த பெற்றோர், கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டார். தமது கடின உழைப்பாலும் சுயமுயற்சியாலும் மாபெரும் வெற்றியீட்டிய மாணவர்களைப் பாராட்டிப் பேசிய ஆளுநர், 'கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மாணவரொருவர் தேசிய நிலையில் முதலிடம் பெற்றுள்ளமை, மாகாணத்தின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது' எனக் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ். ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவியான தேவதாஸ் கிலானி என்ற மாணவி உயிரியல் தொழில்நுட்ப துறையில் மாவட்டத்தில் முதலிடமும், அகில இலங்கை ரீதியில் 27 ஆவது இடமும் பெற்று சாதனை படைத்துள்ளார். குறித்த மாணவியின் தந்தை, மாணவி 10 மாத குழந்தையாக இருக்கும் போது உயிரிழந்துள்ளார். அதன்பின்னர் குறித்த மாணவியின் தாயாரே கூலி தொழில் செய்து அந்த மாணவியை கற்பித்து வந்த நிலையில் இவ்வாறு சாதனை புரிந்துள்ளார். நிம்மதியாக இருந்து கல்வி கற்பதற்கே ஒரு சீரான வீடு இல்லாத நிலையிலும் குறித்த மாணவி சாதித்துள்ளார்.

# இந்தியாவின் அயலக இராஜதந்திரமும் மேற்காசிய சவாலும்

இந்து சமுத்திரத்தில் ஈரானியப் போர்க் கப்பலான ஐ.ஆர். ஐ.எஸ். டினாவை அமெரிக்கா மார்ச் 4ஆம் திகதி மூழ்கடித்ததுடன் மேற்காசியப் போர் தெற்காசியாவுக்கு வந்து சேர்ந்து விட்டது. பெப்ரவரி 28 தொடங்கிய போர் கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் உணவு மற்றும் சமையல் எரிவாயு, பசளை வகைகள் என்று அன்றாட தேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும் பயணங்கள், வர்த்தகம், போக்குவரத்தைச் செய்வதிலும் இடையூறுகள், மேற்காசிய பிராந்தியத்தில் வேலை செய்யும் குடிமக்களின் பாதுகாப்பு என்று பல்வேறு வழிகளில் தெற்காசிய வீடுகளை வந்தடைந்திருக்கிறது.

ஒரு கோடி இந்தியர்கள் 50 இலட்சம் பாகிஸ்தானியர்கள், 50 இலட்சத்துக்கும் 60 இலட்சத்துக்கும் இடைப்பட்ட பங்களாதேஷிகள், 20 இலட்சம் நேபாளியர்கள் மற்றும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான இலங்கையர்கள், பூட்டானியர்கள் மற்றும் மாலைதீவுக்காரர்கள் உட்பட சுமார் 2 கோடி 50 இலட்சம் தெற்காசியர்கள் மேற்காசியாவில் வேலை செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

50 இலட்சத்துக்கும் 80 இலட்சத்துக்கும் இடைப்பட்ட ஆப்கானியர்கள் ஈரானில் அகதிகளாக தங்கியிருக்கிறார்கள். இதற்கு புறம்பாக, வேறு தெற்காசியர்களுடன் சேர்ந்து கடலோடிகளாக அல்லது கப்பல் பணியாளர்களாக உலகம் பூராவும் பணியாற்றுபவர்களில் சுமார் 15 சதவீதத்தினர் இந்தியர்கள். இவர்கள் எல்லோரும் குறிப்பாக, ஹோர்முஸ் நீரிணையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பணியாற்றுபவர்கள் ஆபத்தை எதிர்நோக்குகிறார்கள்.

போர் நெருக்கடியில் அடுத்த நடவடிக்கைகள் குறித்து புதுடில்லி திட்டங்களை வகுத்துவரும் நிலையில் முழு பிராந்தியத்துக்கும் எத்தகைய தாக்கங்கள் ஏற்படும் என்பதைப் பற்றி மாத்திரமல்ல, ஒவ்வொரு அயல் நாட்டுடனான உறவுகளில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்தும் இந்தியா பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமான தாகும்.

### வியப்பைத் தரும் இந்திய நிலைப்பாடு

போரின் தொடக்கத்தில் அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் தாக்குதல்களில் ஈரானின் அதியுயர் தலைவர் அயத்தொல்லா அலி காமெனியும் அவரது குடும்பத்தின் பல உறுப்பினர்களும் கொல்லப்பட்ட போது புதுடில்லி வெளிக்காட்டிய பிரதிபலிப்பு பிராந்தியத்தின் மற்றைய நாடுகள் பலவற்றை விடவும் வேறுபட்டதாகருந்தது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டியது முக்கியமானதாகும்.

காமெனியின் மரணத்தையடுத்து உடனடியாகவே பாகிஸ்தானும் பங்களாதேஷும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டன. மாலைதீவு ஈரான் மீதான அமெரிக்க இஸ்ரேலிய தாக்குதல்களையும் ஈரானின் பதில் தாக்குதல்களையும் கண்டனம் செய்தது. இலங்கை வெளியுறவு அமைச்சர் தனது அனுதாபங்களைத் தெரிவித்தார்.

இதற்கு மாறாக, புதுடில்லியில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்கு வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரியை அனுப்பி வைப்பதற்கு இந்திய வெளியுறவு அமைச்சுக்கு ஐந்து நாட்கள் எடுத்தது. மினாப் நகரில் கடற்படைத் தளம் ஒன்றுக்கு அருகாமையில் இருந்த மகளிர் பாடசாலை ஒன்றின் மீதான குண்டுவீச்சுக்களில் 150 க்கும் அதிகமான மாணவிகளும் ஆசிரியைகளும் கொல்லப்பட்டது தொடர்பாக கவலை தெரிவிப்பதற்கு இந்திய வெளியுறவு அமைச்சுக்கு இன்னொரு வாரம் எடுத்தது. பரந்தளவிலான பிராந்தியத்திலும் கூட தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் (ஆசியான்) வெளியுறவு அமைச்சர்கள் தாக்குதல்களை தொடங்கியமைக்காக அமெரிக்காவையும் இஸ்ரேலையும் பிறகு தாக்குதலை நடத்தியமைக்காக ஈரானையும் கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டனர்.

இது வெறும் தோற்றத்தைப் பற்றியது அல்ல, இந்தியாவினதும் தெற்காசியாவின் - கலாச்சார விழுமியங்களைப் பற்றியது. அவரது கொள்கைகள் எவ்வாறு நோக்கப்பட்டன என்பதற்கு அப்பால், சர்வதேச நியமங்களை மீறி ஒரு அரசின் 86 வயதான மதத்தலைவர் காமெனி கொல்லப்பட்டிருக்கிறார்.



அடுத்தடுத்த நாட்களில் இந்தியா வெளியிட்ட அறிக்கைகளில் ஈரானுக்கும் லெபனானுக்கும் எதிரான அமெரிக்கா அல்லது இஸ்ரேலின் தாக்குதல்கள் கண்டிக்கப்படாமல், ஈரானின் பதில் தாக்குதல்கள் கண்டனம் செய்யப்பட்டது வழமை மீறிய ஒரு செயலாகும்.

தாக்குதல்களுக்கு இரு நாட்கள் முன்னர் பிரதமர் நரேந்திர மோடி இஸ்ரேலுக்கு மேற்கொண்ட விஜயம் மற்றும் 'தற்போதைய தருணத்திலும் அதற்கு அப்பாலும்' இந்தியா இஸ்ரேல் பக்கத்தில் நிற்கும் என்று அந்த நாட்டுப் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அவர் செய்த அறிவிப்பின் பின்புலத்தில் இந்தியாவின் ஆரம்பப் பிரதிபலிப்புக்களை விளக்குவது சாத்தியமாயிருக்கலாம். ஆனால், விரிவடையும் போரின் பயங்கரம் அதிகரிக்கின்ற நிலையில் அதுவும் நின்றுபிடித்து திருப்பித் தாக்குவதில் ஈரான் அதன் வலிமையை வெளிக்காட்டுகின்ற போது பெருமளவுக்கு சமநிலையான ஒரு பிரதிபலிப்பைக் காண்பிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

பிராந்தியப் பிரச்சினைகளில் பக்கம் சாராமல் மேற்காசியாவின் ஒவ்வொரு நாட்டுடனும் உறுதி வாய்ந்த இருதரப்பு உறவுகளை கட்டியெழுப்புவது என்ற இந்தியாவின் பாரம்பரியமான நிலைப்பாடு, நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்ட ஒரு அந்தஸ்தில் அதை எப்போதுமே வைத்திருந்தது. ஹோர்முஸ் நீரிணையின் ஊடாக இந்தியக் கப்பல்கள் சென்று வருவதற்கு உதவுமாறு ஈரானிய ஜனாதிபதி பெசெஷ்கியானிடம் மோடி கேட்டுக் கொண்ட போது அந்த நல்லெண்ணமும் நம்பிக்கையும் நிரூபணமானது.

மேலும் உயிர்தப்பிய கடற்படை வீரர்களுக்கு உதவ முயற்சிக்காமல் இலங்கைக்கு அண்மையாக ஈரானிய கப்பலான டினாவை மூழ்கடித்ததை வெட்கங் கெட்ட முறையில் பெருமையாகப் பேசிய அமெரிக்காவின் செயல் பிராந்தியத்தில் பலருக்கு அதிர்ச்சியாக இருந்தது. மீட்பு நடவடிக்கைகளில் இலங்கையின் கடற்படைக்கு இந்திய கடற்படை உடனடியாகச் செய்த உதவியும் பிராந்தியத்தில் நின்ற மற்றைய ஈரானிய இராணுவக் கப்பல்களை துறைமுகங்களில் பாதுகாப்பாக தரித்து நிற்க டில்லியும் கொழும்பும் அனுமதித்ததும் மெச்சத்தக்கது. ஆனால் விசாகபட்டினத்தில் பெப்ரவரியில் நடைபெற்ற இந்தியாவின் சர்வதேச கடற்படை பயிற்சியிலும்


(மிலான்2026) சர்வதேச போர்க்கப்பல் கண்காட்சியிலும் விருந்தினர்களாகப் பங்கு பற்றிய ஈரானிய கடற்படை வீரர்களின் மரணங்களுக்கு அனுதாபம் தெரிவிக்க இந்திய கடற்படை தவறியதை விளங்கிக் கொள்வது கஷ்டமாக இருக்கிறது.

### பொருளாதார - பிராந்திய கடல்சார் பாதுகாப்பு

தற்போது எந்த உறவையும் கொண்டிராத பாகிஸ்தானைத் தவிர, ஏனைய அயல்நாடுகளின் கவலைகள் தொடர்பில் அக்கறை கொண்டிருப்பதை அவற்றுக்கு இந்தியா உறுதியாகத் தெரிவித்து நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். எரிசக்தி தட்டுப்பாடு தீவிரமடையும் நிலையில், பெற்றோலுக்கும் டீசலுக்கும் பங்களாதேஷ், இலங்கை மற்றும் மாலைதீவு புதுடில்லியிடம் வேண்டுகோள் விடுத்தன. நிலைவரம் மேலும் மோசமடையுமானால், நிலத்தால் சூழப்பட்ட நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளிடமிருந்தும் வேண்டுகோள்கள் வரலாம்.

கொரோனா நோய் பரவியதனால் ஏற்பட்ட நெருக்கடியைக் கையாண்ட விடயத்தில் 2021ஆம் ஆண்டில் இந்தியா அதன் அயல்நாடுகளுக்கு பல வாரங்களாக தடுப்பூசிகளை விநியோகிக்காமல் இருந்ததைப் போன்ற நிலைவரம் மீண்டும் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு இந்தியா முன்கூட்டியே திட்டத்தை வகுக்க வேண்டும். அந்த கசப்பான நினைவுகள் மறைந்து போவதற்கு இந்தியாவின் தடுப்பூசித் திட்டம் பெரிதும் உதவியது. அத்தகைய சூழ்நிலைகளில் பிராந்தியத்தில் உள்ள சகலரினதும் தேவைகளையும் கவனிக்கும் அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

2020ஆம் ஆண்டுக்குப் பிறகு -


கட்டுரையாளர்:
சுஹாசினி ஹைதர்

கொவிட் - 19 எல்லையோரம் இந்திய - சீனப் பதற்றநிலை காரணமாக விநியோகச் சங்கிலி தடைப்பட்டமை, ரஷ்ய - உக்ரெய்ன் போருக்கு மத்தியில் தானியங்கள், எண்ணெய் மற்றும் யூறியா மீதான தடைகள், மேற்காசியாவில் தொடர்ச்சியாக ஏற்பட்ட மோதல்களின் விளைவாக அந்த நாடுகளில் தொழில் பார்ப்பவர்கள் அனுப்பும் பணத்தில் ஏற்ற இறக்கங்கள், பிராந்தியத்தில் பெரும் எண்ணிக்கையானவர்கள் வேலை செய்யும் ஆடைத் தொழிற்துறை மற்றும் கடலுணவு ஏற்றுமதி ஆகியவற்றைப் பாதிக்கக் கூடியதாக ட்ரம்ப் நிருவாகம் கடைப்பிடித்த வரிக் கொள்கையின் தாக்கம், அமைதியிழந்த இளஞ்சந்தியைக் கொண்ட பிராந்தியத்தில் தொழில் வாய்ப்புகள் மீது செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தும் தாக்கத்தின் அதிகரிப்பு என்று தெற்காசியா பல்வேறு பிரச்சினைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

### இளைஞர் கிளர்ச்சிகள்

இளைஞர் கிளர்ச்சிகள் இந்தியாவின் அயல் நாடுகளில் இளைஞர் கிளர்ச்சிகள் மூண்டு அதன் விளைவாக புதிய அரசாங்கங்கள் பதவிக்கு வந்தது ஒன்றும் தற்செயலானது அல்ல. இறுதியாக, மார்ச் 5 நேபாளத்தில் நடைபெற்ற தேர்தலில் இளைய தலைமுறையின் (Z - Generation) முதல் அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்திருக்கிறது.

2024 பொதுத்தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு ஏற்பட்ட இழப்புகளின் விளைவாக மோடியின் முதன் முதலான சிறுபான்மை கூட்டரசாங்கம் பதவிக்கு வந்தது. தொழில் வாய்ப்புகள் இல்லாததன் காரணமாக இளைஞர்கள் மத்தியில் வளர்ந்த அதிருப்பதியும் அதற்கு ஒரு காரணம். இந்த மாற்றங்கள் இந்தியாவின் இராஜதந்திரத்தின் மீது தாக்கத்தைச் செலுத்தின. புதிய ஆணைகளுடன் தெரிந்தெடுக்கப்பட்ட இந்த தலைவர்களுடன் (அவர்கள் இந்தியாவுக்கு

(18ம் பக்கம் பார்க்க)

# ஒரு கொலையும் யாழ்ப்பாணத்தவரின் பயங்களும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



சித்த மருத்துவத்துறை விரிவுரையாளரின் கொலைச் சம்பவம் ஒரு தனிப்பட்ட குற்றச்செயலா? அல்லது பொதுவான சமூகப் பிறழ்வின் குறிகாட்டியா?

கொல்லப்பட்டவர் ஒரு மருத்துவர், விரிவுரையாளர் என்பதும்,குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அந்தச் சம்பவம் அதிகம் கவனிப்பைப் பெறக் காரணம். அவர் ஒரு படித்த தாய்.



பிள்ளையும் யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடசாலையில் படித்திருக்கிறார். ஒரு படித்த தாய் பதின்ம வயதிலும் அதன் பின்னரும் பிள்ளையை வெற்றிகரமாகக் கையாள முடியாமல் போனது அவருடைய தனிப்பட்ட தோல்வியா? அல்லது நடப்பில் உள்ள கல்வி முறையின் தோல்வியா?

இக்கேள்விகளுக்கான விடைகளைத் தேடுவதாக இருந்தால் ஒரு குற்றச் செயல் மட்டும் போதாது.ஒரு குறிப்பிட்ட கால கட்டத்துக்குள் நிகழ்ந்த குற்றச் செயல்களைத் தொகுத்து ஆராய வேண்டும். பொருத்தமான புள்ளி விபரங்களைத் தொகுத்தும் பகுத்தும் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையில் அது ஒரு சமூகப் பொதுத் தோறப்பாடா? இல்லையா? என்ற முடிவுக்கு வர வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் படித்த கல் வீட்டுக்காரர்கள் அதிகமாக சிசிடிவி கமராவை வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பொருத்தி வைத்திருக்கிறார்கள். குற்றச் செயல்களையும் திருடர்களையும் கண்காணிப்பதற்கு கமராவை பொருத்தும் ஒரு சமூகம், தங்கள் வீட்டுக்குள் தங்கள் கண் முன்னே வளரும் பிள்ளைகளை தொடர்ச்சியாகக் கண்காணிக்கின்றதா? பிள்ளைகளை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் பெற்றோரும் மூத்தவர்களும் பிள்ளைகளிடம் ஏற்படும் மாற்றங்களை உடனடியாகக் கண்டு கொள்வார்கள்.

பிள்ளைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கத் தவறும் பெற்றோரே பிள்ளைகளைத் தவறவிடுகிறார்கள். பெரும்பாலான படித்த வசதியானவர்கள் வீடுகளில் கமராவைப் பொருத்தும் ஒரு சமூகத்தில் பிள்ளைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க முடியாமல் போவது ஏன்? பிள்ளைகளைக் கண்காணிப்பதற்கு கனராவைப் பொருத்தும் பெற்றோரும் உண்டு. ஆனால் கமராவால் மட்டும் பிள்ளைகளைக் கண்காணிக்க முடியாது. அன்பினால் தான்,பாசத்தால் தான் ,அறிவினால் தான் பிள்ளைகளைப் பின்தொடரலாம் கண்காணிக்கலாம். ஒரு பகுதி படித்த பெற்றோராலேயே ஏன் பிள்ளைகளைக் கண்காணிக்க முடியாமல் போகிறது?

இக்கட்டுரையாளர் யாழ்ப்பாணத்தில் கிராம மட்டங்களில் நடக்கும் சந்திப்புகளின் போது ஒரு கேள்வி கேட்பார். உங்களில் எத்தனை பேரிடம் கைபேசிகள் உண்டு? எல்லாருமே உண்டு என்று கூறுவார்கள். அதில் எத்தனை ஸ்மார்ட் கைபேசிகள்? என்று கேட்டால், அநேகமானவர்கள் தங்களிடம் இருப்பது அது தான் என்று கூறுவார்கள். பின்னர் ஒரு கேள்வி கைபேசியில் நீங்கள் சராசரியாக ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலங்கள் செலவழிப்பீர்கள்? அதற்குக் கிடைக்கும் பதில் பெரும்பாலும் அதிர்ச்சியூ ட்டுவதாக இருக்கும். ஆகக் குறைந்தது ஒரு மணித்தியாலமும் ஆகக்கூடியது 5 மணித்தியாளங்களும் என்று பதில் கிடைக்கும். அதை வைத்து மீண்டும் ஒரு கேள்வி. அப்படியென்றால் கடந்த வாரம் முழுவதும் நீங்கள் கைபேசியில் இருந்து கற்றுக் கொண்ட ஒரு விடயத்தைச் சொல்லுங்கள்? அல்லது கைபேசியில் நீங்கள் பார்த்த, கேட்டவற்றுள் உங்களை மிகவும் பாதித்த, உங்களுடைய உணர்வில், சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்திய ஒரு விடயத்தைச் சொல்லுங்கள் ?என்று கேட்டால் அநேகமானவர்கள் பொருத்தமான பதிலைச் சொல்ல மாட்டார்கள். அரிதாகத் தான் நல்ல பதில் வரும்.

இது கிராமப்புறச் சந்திப்புகளின் போதும் அவதானிக்கப்பட்டது. நகர்ப்புறச் சந்திப்புகளின் போதும் அவதானிக்கப்பட்டது. படிப்பறிவு மட்டம் குறைந்தவர்கள் மத்தியிலும் அவதானிக்கப்பட்டது. அரசு அலுவலகங்களிலும் அவதானிக்கப்பட்டது. எனவே தொகுத்துப் பார்த்தால் படித்தவர், படிக்காதவர், வேலை செய்பவர், வேலை செய்யாதவர், வசதியானவர், வசதி குறைந்தவர், என்ற வேறுபாடு இன்றி சமூகத்தில் அதிக தொகையினர் கைபேசிகளின் கைதிகளாகவே காணப்படுகிறார்கள்.

அவ்வாறு கைபேசிகளின் கைதிகளாகக் காணப்படுவோரிடம் மேலும் ஒரு கூர்மையான கேள்வி கேட்கப்படும். நீங்கள் சராசரியாக ஒரு மணித்தியாலத்தில் இருந்து ஐந்து மணித்தியாலங்கள் வரை கைபேசியோடு மினக்கெடுக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய வளரும் பிள்ளைகளின் கண்களைப் பார்த்து எத்தனை நிமிடங்கள் கதைக்கிறீர்கள்? உங்கள் வளரும் பிள்ளைகளைத் தொட்டு அரவணைத்து எவ்வளவு நேரம் உரையாடுகிறீர்கள்? உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் எத்தனை மணித்தியாளங்களைச் செலவழிக்கிறீர்கள்? இந்த கேள்விக்கு அவர்கள் கூறும் பதில் பெரும்பாலும் கைபேசியோடு அவர்கள் செலவழிக்கும் நேரத்தை விட குறைவான நேரந்தான் தங்கள் பிள்ளைகளோடு அவர்கள் செலவழிக்கிறார்கள் என்பதாக இருக்கும்.

கைபேசி மட்டுமல்ல, தொலைக்காட்சியும் ஒரு நேரம் தின்னி தான். வீட்டில் இருப்பவர்கள்,வயோதிபர்கள், குடும்பப் பெண்கள் தொலைக்காட்சியோடு கண்ணை ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து அவர்கள் கற்றுக் கொள்வது பெரும்பாலும் முற்போக்கானது அல்ல. பெரும்பாலான தொலைக்காட்சி சீரியல்கள் அவர்களுக்கு எதைக் கற்றுக் கொடுக்கின்றன தொகுத்துப் பார்த்தால் பெரும்பாலான திரைத் தொடர்களில் பெண்கள் தான் சூழ்ச்சிகள், சதிகள் நிறைந்த தந்திரசாலிகள். மேலும், ஒரு ஆணுக்கு இரண்டு பெண்கள் ஆசைப்படுவார்கள். அந்த ஆண் ஒரு நாகமாக இருந்தால் இரண்டு பெண் நாகங்கள் ஆசைப்படும். இப்படிப்பட்ட திரைத் தொடர்களில் இருந்து முற்போக்கான விடயங்களை பெண் விடுதலையை, சமூக விடுதலையை, கற்றுக் கொள்ள முடியாது.பெண்கள் பெண்களுக்கு எதிராக எப்படிச் சூழ்ச்சிகள் செய்வது என்று வேண்டுமானால் கற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு கைபேசிகளோடும் தொலைக்காட்சிகளோடும் தம் பொழுதைப் போக்கும் பெற்றோரும் முதியோரும் அதே அளவு நேரத்தை பிள்ளைகளோடு செலவழிக்கிறார்களா? கிராம மட்ட சந்திப்புகளில் உங்கள் வளர்ந்த பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்கும் போது பிள்ளைகளோடு கதைத்துக் கதைத்து உணவு பரிமாறுவீர்களா? பிள்ளையின் கண்களைப் பார்த்து உரையாடுவீர்களா?எ ன்று கேட்டால், கணிசமான தாய்மார் கூறுவார்கள், இல்லை பிள்ளைகளோடு ஒன்றாக இருந்து சாப்பிடும் சந்தர்ப்பங்கள் குறைவு என்று பிள்ளைக்கு சோலி அதிகம். பிள்ளையும் கைபேசியில் கண்ணை ஒட்டிக்கொண்டிருக்கும்.

மனிதர்கள் முன்னெப்பொழுதையும் விட பாரதூரமான விதத்தில் பொழுது போக்கிகளாக மாறி விட்டார்கள். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே முதியோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே பொழுதுபோக்குச் சாதனங்கள் பெருகி விட்டன. கைபேசியின் கைதிகளும் தொலைக்காட்சியின் கைதிகளும் மெய்யான பொருளில் பிள்ளைகளை முழுமையாகக் கண்காணிப்பதில்லை.

போதைப்பொருள் பாவனை தொடர்பான கருத்தரங்குகளில் துறைசார்ந்த மருத்துவர்களும் நிபுணர்களும் கூறுவார்கள்,பிள்ளைகளின் கண்களை உற்றுக் கவனியுங்கள். அவை அசாதாரணமாகச் சிவந்திருக்கின்றனவா? பிள்ளையின் நடத்தைகளைப் பாருங்கள். அது எங்கே போகிறது? எப்பொழுது வருகிறது? யாரோடு சேர்க்கிறது? யாரோடும் சேர்வதில்லை? என்பவற்றைக் கவனியுங்கள். அது நித்திரை கொள்கிறதா? இல்லையா? ஒழுங்காகச் சாப்பிடுகிறதா? ஒழுங்காக மலம் கழிக்கிறதா? ஒழுங்காகக் குளிக்கிறதா? ஒழுங்காக ஆடை உடுத்துகிறதா? என்று கவனியுங்கள். பிள்ளைகளின் கண்களில் ,நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கவனியுங்கள். பிள்ளைகளின் கைபேசிகளில் யார் யார் இருக்கிறார்கள்? யாரோடு கதைக்கும் போது பிள்ளை தனியே போகிறது? பிள்ளை அதிகம் தனிமையில் இருக்கிறதா? இல்லையா? என்று உற்றுக் கவனியுங்கள். தனிமையில் இருக்கும் பொழுது பிள்ளை என்ன செய்கிறது? என்று பாருங்கள். அதாவது ஒரு சிசிடிவி கமராவானது நடக்கும் சம்பவங்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பது போல பெற்றோரும் பிள்ளைகளை இடையறாது கவனிப்பார்களாக இருந்தால் ஒரு பிள்ளையும் பெற்றோரிடம் இருந்து தவறிப் போகாது. பிள்ளைகளைக் கையாள்வது பெற்றோருக்குப் பெரிய சவாலாகவும் இராது.

எனவே கைப்பேசிகளின் காலத்தில் பொழுதுபோக்குகளின் யுகத்தில், பெற்றோருடைய குடும்ப முகாமைத்துவத் திறன்களை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. பிள்ளை வளர்ப்புக்கான அறிவு சார்ந்த திறன்களை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. ஒரு குடும்பத்தின் கொள்ளளவை அறிவு பூர்வமாக விஞ்ஞான பூர்வமாக அதேசமயம் உணர்வு பூர்வமாகவும் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது.

அரசுசார்பற்ற நிறுவனங்கள் கிராம மட்டத்திலும் அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் திறன்களைக் கட்டியெழுப்பும் கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்துவதுண்டு. ஆனால் அரசு சார்பற்ற நிறுவனங்களால் அழைத்து வரப்படுகின்ற வளவாளர்களில் அநேகமானவர்கள் யாந்திரீகமானவர்கள். சமூகத்தை அதன் பண்பாட்டு அம்சங்களின் ஊடாக அணுக முடியாதவர்கள். பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்களின் கொள்ளளவைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒரே மாதிரியானவை. அங்கேயே ஒரு யாந்திரீகப் பண்பு வந்து விடுகிறது. படைப்புத் திறன் இருக்காது. எனவே சமூகத்தின், குடும்பங்களின் தனிநபர்களின் கொள்ளளவைக் கட்டியெழுப்பும் விடயத்தை அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டும் கையாள முடியாது.

அது ஓர் அரசியல் பண்பாட்டுச் செயல்திட்டம். குடும்பங்களின் கொள்ளளவைக் கட்டி எழுப்புவது, பிள்ளை வளர்ப்புத் திறனைக் கட்டியெழுப்புவது, சமூக முகமைத்துவத்தைக் கட்டியெழுப்புவது முரண்பாடுகள் மோதல்களாக வராமல் தடுப்பதற்குரிய திறன்களைக் கட்டியெழுப்புவது, உள் முரண்பாடுகள் குற்றச்செயல்களாக விகார வளர்ச்சி அடைவதைத் தடுப்பதற்குரிய அறிவு சார் திறன்களைக் கட்டியெழுப்புவது.....போன்ற எல்லாமே அரசியல் செயற் திட்டங்கள் தான். அது முழுக்க முழுக்க அரசியல் (18ம் பக்கம் பார்க்க)

# வெறுப்புப் பேச்சை ரசிக்கும் தமிழர்கள்?

கடந்த திங்கட்கிழமை நல்லூரடியில் ஓர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. இதை ஒழுங்குபடுத்தியது வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டமைப்பு என்ற அரசு சார்பற்ற நிறுவனம் ஆகும். தமிழ் அரசியல்வாதிகளின் வெறுப்புப் பேச்சுக்கு எதிராக அந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அது தொடர்பாக அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. தமிழ் அரசியல்வாதிகளின் வெறுப்பு பேச்சுகளுக்கு எதிராக அடுத்த கட்டமாக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அந்த அமைப்பினர் தெரிவித்தார்கள்.




நல்லூரில் அவர்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் பொதுவாக அரசியல்வாதிகள் என்று குறிப்பிட்டதற்கு பதிலாக அர்ஜுனா என்று சுட்டிப்பாகக் குறிப்பிட்டிருந்திருக்க வேண்டும் என்று ஒரு பகுதி தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கருதுவதாகத் தெரிகிறது. ஆனால் தாங்கள் அர்ஜுனாவை மட்டும் அவ்வாறு குற்றம் சாட்டவில்லை என்றும் தமிழ்த் தேசியப் பரப்பில் வேறு அரசியல்வாதிகளும் அவ்வாறு வெறுப்புப் பேச்சுக்களை உமிழ்ந்திருக்கிறார்கள் என்றும் அந்த அமைப்பினர் தெரிவிக்கின்றார்கள்.

அதில் உண்மை உண்டு. வெறுப்புப் பேச்சு அர்ஜுனாவில் இருந்து தொடங்கவில்லை. அவருக்கு முன்னரே அது இருந்தது. தமிழ்த் தேசிய அரசியலில் வெறுப்பர்கள் எப்பொழுதும் இருந்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் நோய் வாய்ப்படும் போது, தமிழ்த் தேசிய அரசியலில் பகை முரண்பாடு எது? நேசமுரண்பாடு எது? என்பதை பிரித்தறியத் தேவையான முதிர்ச்சியும் பண்பாடும் குறையும் போது வெறுப்பர்கள் வேட்டைப் பற்கள் துருத்திக் கொண்டு தெரிய மேலெழுகிறார்கள்.

நல்லூரில் நடந்த அந்தப் போராட்டத்தின் பின் ஏறக்குறைய அதே காலப் பகுதியில், வெவ்வேறு அரசு சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள் இணைந்து அர்ஜுனாவுக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் துறையிடம் ஒரு முறைப்பாட்டை செய்து இருக்கிறார்கள். அண்மையில் அர்ஜுனா கிளிநொச்சி மக்களுக்கு எதிராகவும் மலையக மக்களுக்கு எதிராகவும் தெரிவித்த கருத்து தொடர்பாக அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்கப்படுவதாகவும் தெரிகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நாடாளுமன்ற சிறப்பு உரிமைகளின் கீழ் அர்ஜுனா நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது வேறு. ஆனால் நாடாளுமன்றத்துக்கு வெளியே அவர் குறிப்பிட்ட சமூகங்களுக்கு எதிராக அல்லது நபர்களுக்கு எதிராக அல்லது அமைப்புகளுக்கு எதிராக தெரிவிக்கும் கருத்துக்களை சட்ட ரீதியாகக் கேள்விக்குள்ளாக்க வேண்டும் என்று அவர்கள் கருத்துவதாகத் தெரிகிறது.

தமிழ்த் தேசியப் பரப்பில் கட்சிக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த அதே கட்சிக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதில் தொடங்கி இப்பொழுது வெறுப்பைக் கக்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறதா? உள்நாட்டு நீதி போதாது என்று கூறி அனைத்துலக விசாரணையைக் கோரி நிற்கும் ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் ஒருவர் மற்றவருக்கு எதிராக வழக்கு போடும் நிலைமை அதிகரித்து வருகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் சங்கங்களைச் சேர்ந்த அன்னையர்கள் சில ஆண்டுகளுக்கு முன் தங்களுக்கிடையே மோதிக் கொண்ட போது போலீசுக்குப் போய் முறைப்பாடு செய்தார்கள். பின்னர் ஒரே கட்சிக்குள் ஒருவர் மற்றவருக்கு எதிராக வழக்குப் போடும் நிலைமை வந்தது. அது அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் தன் சொந்தக் கட்சிக்காரருக்கு எதிராகவே வழக்குப் போடும் ஒரு நிலையை அடைந்து விட்டது.இப்பொழுது வெறுப்புப் பேச்சுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்படுகிறது. தமிழ்த் தேசிய அரசியல் எதை நோக்கிப் போகிறது?

அதேசமயம் வெறுப்புப் பேச்சுக்கு எதிராகவும் அரசியல் அவதூறுகளுக்கு எதிராகவும் மேற்கண்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட அதே காலப்பகுதியில், யாழ்ப்பாணத்தில் நடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அர்ஜுனாவும் கஜேந்திரனும் மோதியிருக்கிறார்கள்.




அது ஒரு தரக்குறைவான அருவருப்பான மோதல். மோதலின் ஒரு கட்டத்தில் அர்ஜுனா கஜேந்திரனை நோக்கித் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு சபையில் அமர்ந்திருந்த ஒரு பகுதியினர் கை தட்டுகிறார்கள். அவ்வாறு கை தட்டியவர்கள் அரசாங்கக் கட்சியை சேர்ந்தவர்கள் என்று ஓர் ஊடகவியலாளர் கூறினார். தமிழ் அரசியல்வாதிகள் எதை ரசிக்கிறார்கள்? எதற்குக் கை தட்டுகிறார்கள்?

தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்ல சமூக வலைத்தளங்களில் அதிகமாக மினக்கெடும் தமிழ் மக்களில் கணிசமான தொகையினர் அல்லது அதிக அளவு தொகையினர் எதை ரசிக்கிறார்கள்? எதை ஆர்வத்தோடு பார்க்கிறார்கள்? மேற்கண்ட வெறுப்புப் பேச்சுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் முறைப்பாடுகளோடு சம்பந்தப்பட்ட காணொளிகளோடு ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் நடந்த பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் காணொளி தான் அதிகமாகப் பகிரப்பட்டது. அதிகமாக பார்க்கப்பட்டது. வெறுப்புப் பேச்சு மற்றும் அரசியல் அவதூறுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை விடவும் வெறுப்பு பேச்சுகளையும் ஒருவர் மற்றவரை கீழ்மைப்படுத்தும் அருவருப்பான மோதல்களையும் ரசிக்கும் அளவுக்கு தமிழ்ப் பொதுப் புத்தி விகாரமடைந்து வருகிறதா? கடந்த பெப்ரவரி மாதம் ஒஸ்ரேலியாவில் வசிக்கும் ஒரு மருத்துவர் முகநூலில் ஒரு குறிப்புப் போட்டிருந்தார். அக்குறிப்பில் அவர் கனடாவில் வசிக்கும் தமிழ் அரசியல் விமர்சகர் ஒருவர் ஆங்கிலத்தில் எழுதிய விடயத்தை ஆங்கிலத்திலும் தமிழில் மொழிபெயர்த்தும் பகிர்ந்திருந்தார். மேற்படி கனடாவில் வசிக்கும் அரசியல் விமர்சகர் அர்ஜுனாவை ஏன் தான் ஆதரிக்கிறார் என்பதற்கு பின்வருமாறு விளக்கம் அளித்திருந்தார்... ராமநாதன் அர்ஜீனா எம்.பி.யை நான் மதிக்கிறேன். காரணங்கள்: 1) அவர் தமிழ்த் தேசியவாதத்தை நகைச்சுவைப் பொருளாக்கினார். 2) அவர் நாடாளுமன்றத்தை சாதாரணமான அவையாக்கினார். 3) மருத்துவத் தொழிலை வேறு எந்தத் தொழிலையும் போல சாதாரண தொழிலாக எளிமைப்படுத்தினார் யாழ்ப்பாணத்தில் அது உயர்ந்த தொழில் என நினைக்கும் இடத்தில் இது குறிப்பிடத்தக்க சாதனை. 4) அவர் அரசியலை சாதாரண மனிதனின் நிலையில் அணுகினார். வக்கீல்களுக்கு மட்டும் பாராளுமன்றம் என்பதை நாளை ஒரு விவசாயியால் பாராளுமன்றத்தில் பேச முடியும் என்பதை உறுதிபடுத்தினார்...

மேற்கண்ட முகநூல் குறிப்பின் மீது பலரும் பலவிதமாக பதில்வினை ஆற்றியிருந்தார்கள். அதைத் தனியாகத் தொகுத்துப் பார்க்க வேண்டும். ஆனால் மேற்படி முகநூல் குறிப்பு எழுதிய அந்த மருத்துவர், சில நாட்கள் கழித்து எழுதிய ஒரு முகநூல் குறிப்பில், ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். தான் வழமையாக எழுதும் பதிவுகளை நுகர்பவர்களின் எண்ணிக்கை 500 ஐக் கடப்பதில்லை என்றும் ஆனால் அர்ஜுனாவைப் பற்றிய தன்னுடைய பதிவை நுகர்ந்தவர்கள் 35,000க்கும் அதிகம் என்று. அதாவது வழமையை விட 70 மடங்கு அதிகம்.

இது எதைக் காட்டுகிறது? ஒன்றில் அவருடைய குறிப்பை சமூக வலைத் தளப் பரப்பில் யாரோ காசு கொடுத்துத் திட்டமிட்டுப் பரவலாக்குகிறார்கள். அல்லது அது போன்ற குறிப்புகளை ரசிப்பவர்களின் அல்லது நுகர்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்று பொருள்.

இது தமிழ்க் கூட்டு உளவியல் தொடர்பான தமிழ்ப் பொதுப் புத்தி தொடர்பான ஒரு பண்பாட்டுப் பிரச்சினை. இதனை சட்டரீதியாக மட்டும் அணுக முடியாது தீர்க்கவும் முடியாது. இதற்கு ஒரு பண்பாட்டு மறுமலர்ச்சி தேவை. சீரழிந்து வரும் தமிழ்த் தேசிய அரசியலில் புது ரத்தம் பாய்ச்சும் விதத்தில் ஒரு பண்பாட்டு மறுமலர்ச்சி தேவை. அது ஒரு கூட்டு முயற்சி. அது ஒரு கூட்டு உழைப்பு. அது ஒரு கூட்டுச் சிகிச்சை.

ஒரு சமூகத்தில் கூட்டு முயற்சிகள் பெரும்பாலும் அரசியல் தளத்தில் தான் சாத்தியம். அதாவது அரசியல் தலைமை தான் இது போன்ற கூட்டு முயற்சிகளில் வெவ்வேறு தரப்புகளைய ஒரு மையத்தில் ஒன்றிணைக்க முடியும். ஆனால் துயரம் என்னவென்றால் தமிழில் அதே அரசியல் தரப்புகள்தான் இந்தச் சீரழிந்த பண்பாட்டை உற்பத்தி செய்கின்றன. ஊக்குவிக்கின்றன. காசு கொடுத்து வளர்த்து விடுகின்றன. அவர்கள் பெற்றெடுத்த ஒன்றை அவர்களே காசு கொடுத்து, அணி திரட்டி வளர்த்து விட்ட குருட்டு விகவாசத்தை அழிப்பதற்கு அவர்களாக முன்வருவார்களா?

ஆனால் அப்படி ஒரு பண்பாட்டு மறுமலர்ச்சி ஏற்படவில்லையென்றால் தமிழ்ச் சமூகம் அவிழ்த்து விட்ட பாக்கு முட்டைட பால சிதறிப் போய் விடும். அதன் பின் தாயகம், தேசம், சுயநிர்ணயம் என்றெல்லாம் பொய் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

# இலங்கையின் மத்திய ஆட்சியே மாகாணசபை ஆட்சியை அர்த்தமுள்ளதாக்க வேண்டும்!

கட்டுரையாளர்:
அ.வரதராஜப்பெருமாள்

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தைக் கொண்ட மாகாண ஆட்சி இப்போது இலங்கையின் எந்தப் பாகத்திலும் நடைமுறையில் இல்லை.. அவை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர்களின் தலைமையில் செயற்படுகின்றன. மாகாண ஆட்சியானது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் கீழ் செயற்பட்டாலென்ன அல்லது ஆளுநரின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தாலென்ன அது அரசியல் யாப்பின்படி வரையறுக்கப்பட்ட அளவிலாயினும் சுயாதீனமானமாக செயற்பட வேண்டிய அரச கட்டமைப்பாகும். மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண அரசாங்கங்கள் செயற்படுகின்ற நிலைமை எப்போது இலங்கையில் ஏற்படும் என்று இப்போதைக்கு எதுவும் சொல்வதற்கில்லை.

அது ஒருபுறமிருக்க, மாகாண ஆட்சி அமைப்பானது அரசியல் யாப்பின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையாகவும் முழுமையாகவும கொண்டதாக ஆளுநர் ஆட்சியின் போதும் செயற்பட முடியும் செயற்பட வேண்டும். இங்கே அது பற்றி சில விடயங்களை அவதானிக்கலாம்.

ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவராயிருப்பினும் அவர் அந்தப் பதவியில் இருக்கும் போது எந்தக் கட்சியினதும் பிரதிநிதியாக, எந்தக் கட்சிக்கும் சார்பானவராக, எந்தக் கட்சியினது நலன்களையும் பிரதிபலிப்பவராக அல்லது எந்தக் கட்சியினதும் செல்வாக்குக்கு வெளிப்படையாக உட்பட்டவராக இருக்க முடியாது இருக்கக் கூடாது. மாகாண ஆட்சியின் ஆளுநராக இருக்கும் ஒருவர் அந்தப் பதவியைப் பெறுவதற்கு முதலில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தார் என்பதோ அரசாங்கத்தின் எந்த உத்தியோக பதவியில் இருந்தார் என்பதோ முக்கியமில்லை. ஆளுநராக அமர்ந்திருக்கும் கால கட்டத்தில் அவர் எந்தக் கட்சியையும் சாராதவரராக இருக்க வேண்டும். எந்தக் கட்சிக்கும் சார்பானவராக இருக்க கூடாது.

1978ம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் உருவாக்கிய நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை என்பது அமெரிக்க அரசியல் முறையையும் பிரெஞ்சு அரசியல் முறையையும் கலந்து ஆக்கப்பட்ட கலவையே என அரசியல் விஞ்ஞான அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இலங்கையின் அரசியற் கட்டமைப்பில் உள்ள மாகாண ஆட்சி முறை அவ்வாறானதல்ல இந்திய அரசியலமைப்பு முறைப்படி இங்கிலாந்து பாராளுமன்ற ஆட்சி முறையின் அடிப்படையில் செயற்பட வகுக்கப்பட்டதாகும். இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரும் மாகாண அமைச்சர்களும் இருக்கும் போது ஆளுநர் என்பவர் மாகாண ஆட்சியின் பெயரளவிலான தலைவரே.

மாகாண சபைகளுக்கான தேர்தல் திருத்த சட்டத்தை தவறான முறையிலும் தீய நோக்கங்களோடும் பிரயோகித்து மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களின் அரசாங்கத்தைக் கொண்டதான மாகாண ஆட்சிகள் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறைக்கு வர முடியாமல் ஆக்கப்பட்டிருப்பதோடு, மத்திய அரசாங்கத்தினர் தங்களது அரசாங்கத்தின் ஆட்சியின் கீழானதாக மாகாண ஆட்சிகளை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். மாகாணங்களின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் இல்லாத போது மாகாண ஆட்சிக்கான அரசாங்கமாக இருக்கும் ஆளுநர்



ஜனாதிபதியின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற்று மாகாண ஆட்சிக்கான கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும். ஆனால் இங்கு மத்திய அரசாங்கம் மாகாண ஆட்சியை கபளீகரம் செய்து விட்டதாகவே உள்ளது. மாகாண ஆட்சியின் அமைச்சு நிர்வாக கட்டமைப்புகளை மத்திய அமைச்சர்கள் தமது அமைச்சுகளின் நிர்வாக கட்டமைப்புகளின் பகுதிகளாக ஆக்கிக் கொள்கிறார்கள். ஆளுநர் என்பவர் மாவட்டச் செயலாளர்களுக்கு சற்று மேலான தரம் கொண்ட ஓர் அரச அதிகாரியாகவே ஆக்கப்பட்டிருக்கிறார்.

இது மாகாண ஆட்சி முறையையே சிறுமைப் படுத்தி விடுகிற அர்த்தமிழக்கச் செய்கிற வேலையே. இதனையே ராஜபக்சாக்களும், விக்கிரமசிங்காக்களும் செய்தார்கள் இப்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினரும் அதனையே செய்கிறார்கள். மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும், பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களிலும் அமைச்சர்களே முதற் பிரஜைகளாக தலைவர்களாக அமர்கிறார்கள். எந்தவொரு மாவட்டத்தினதும் ஒட்டுமொத்த அபிவிருத்தி தொடர்பாக உறுதி செய்யவோ, உத்தரவாதம் வழங்கவோ அல்லது ஆணையிடவோ எந்தவொரு மத்திய அமைச்சருக்கும் சட்டரீதியான அதிகாரம் கிடையாது. இப்போதுள்ள விதமான மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்கள் எந்தவகையிலும் உருப்படியான செயற்பாடுகளுக்கான அரச கட்டமைப்பாக அமைய மாட்டாது என்பதோடு, இவ்வகையான கூட்டங்கள் ஆளுநர்களின் தராதரங்களை குறைக்கின்றன -அவர்களின் பெறுமதிகளையும் அர்த்தமற்றதாக்குகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்களின் கீழ்:-

- சுமார் 80000 அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச ஊழியர்கள் சேவை செய்கிறார்கள்,
- இதை விட 1800 க்கு மேற்பட்ட கல்லூரிகள் மற்றும் பள்ளிக்கூடங்கள் என கல்வி நிலையங்கள் உள்ளன,
- போதனா வைத்திய சாலைகள் மற்றும் விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கைகள் கொண்ட விசேட வைத்திய சாலைகள் என்பவை தவிர ஏனைய வகைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அத்தனை வைத்திய சாலைகளினதும் ஆட்சி மாகாண ஆட்சியிடமே உள்ளன.
- அரசியல் யாப்பின்படி மாகாணத்திலுள்ள பொலிஸ் அமைப்பானது ஆளுநருக்கு கட்டுப்பட்டது — மாகாண பொலிஸ் மாகாண ஆளுநருக்கு பொறுப்புக் கூற வேண்டியது:
- தனியார் உடைமைகளாக உள்ள காணிகள் அனைத்தினதும் மீதான அனைத்து அதிகாரங்களும் மாகாண ஆட்சிக்கே உண்டு:
- மது விற்பனைகளை, போக்குவரத்துக்களை நெறிப்படுத்தவும் கட்டுப்படுத்தவுமான அதிகாரங்கள் மாகாண ஆட்சிக்கு உண்டு.
- அத்தனை கூட்டுறவு அமைப்புகளையும்

அத்தனை உள்ளூராட்சி சபைகளையும் நெறிப்படுத்தவும் வழிப்படுத்தவும் அதிகாரங்கள் மாகாண ஆட்சிக்கு உண்டு.

இப்படியாக மாகாணங்களுக்கு வெளிப்படையாகவும் தெளிவாகவும் உள்ள அதிகாரங்களை அடுக்கினால் நீண்டு போகும். ஆனால் இவ்வளவு விடயங்கள் இப்போதும் நடைமுறையில் மாகாண ஆட்சியின் கீழ் — ஆளுநரின் கீழ் உள்ளனவா? தமக்குரிய அதிகாரங்களை பிரயோகித்து தமது பொறுப்புகளையும் கடமைகளையும் ஆளுநர்கள் நிறைவேற்றுகிறார்களா? நிறைவேற்றுவதை ஜனாதிபதி உறுதிபபடுத்துகிறாரா?


ஆளுநருக்கு என்ன தடை? அமைச்சர்கள் தடையா? அதிகாரங்கள் இல்லாமை தடையா? இலங்கையின் அரசமைப்பில் ஜனாதிபதி தானே அனைத்துமாக இருக்கிறார். அப்படியிருக்கையில் அவரது விருப்பத்துக்கும் அரவணைப்புக்கும் உரிய ஆளுநருக்கு ஏது பிரச்சினைகள்? அபிவிருத்திக் கூட்டங்கள் நடக்கின்றன! ஆலோசனைக் கூட்டங்கள் நாழும் பொழுதும் நடக்கின்றன! அரசாங்கத்தால் அடிக்கல் நாட்டல்கள் அடுத்தடுத்து நடக்கின்றன. ஆனால் உருப்படியாக நிறைவேற்றப்பட்ட அபிவிருத்திகளின் பட்டியலை இன்னமும் காணமுடியவில்லை. அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்துக்கும் ஒரே கால அளவு தேவைப்படுபவதில்லை. ஒரே வாரத்தில் செய்யக் கூடியவைகளும் இருக்கின்றன ஒரே மாதத்தில் செய்யக் கூடியவைகளும் இருக்கின்றன! ஒரே வருடத்தில் செய்யக் கூடியவைகளும் இருக்கின்றன.

மாகாண ஆட்சிகளை ஜனாதிபதியே நேரடியாக வழிகாட்டி ஆளுநரைக் கொண்டு செயற்படுத்துகின்ற போதிலும் மாகாண ஆட்சி முறை மக்களுக்கு பயனற்றவை அவற்றால் காத்திரமாக செயற்பட முடியாது அவை வெள்ளை யானைகள் என முன்னிருந்தவர்களைப் போல இப்போதுள்ள ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் நிரூபிக்க முயலுகிறார்களா என்ற கேள்வி இங்கு நியாயமாகவே எழுகிறது. இது தான் இன்றைய அரசாங்கத்தின் இலக்காக இருந்தால் இது இலங்கையில் ஜனநாயக கட்டமைப்பின் முன்னேற்றத்துக்கு தடையாகவே அமையும் அதிகாரங்கள் அனைத்தும் குவிந்த மத்திய ஆட்சியின் எதேச்சாதிகாரம் தொடரும் இலக்கையே வெளிப்படுத்தும். இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையிலான நல்லுறவுகளில் முன்னேற்றகரமான வளர்ச்சிக்குத் தடையாகும்.


இலங்கை வாழ் சிறுபான்மையான தேசிய இனங்களின் அடிப்படையான அரசியல் பொருளாதார அபிலாஸைகள் தொடர்பான குறைந்த பட்ச அரசியல் ஏற்பாடாக இந்த மாகாண ஆட்சி முறையே சாத்தியமாக உள்ளது. சிங்கள பேரினவாத சகதியில் இருந்து மக்கள் விடுதலை முன்னணி வெளியே வந்துவிட்டதா இல்லையா என்பதை நிரூபிப்பதற்கு இந்த மாகாண ஆட்சி முறையில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களே சாட்சியாகும்.

பல்லினங்கள் வாழும் இலங்கை ஒரு நாடாக அழகான நாடாக வளமான நாடாக வளர்ச்சி அடைவதை உண்மையாக்குவதற்கு மாகாண ஆட்சி அமைப்பின் பயன்பாட்டையும், அதன் காத்திரமான செயற் திறன்களையும் உறுதிப்படுத்துவதும் மேம்படுத்துவதும், இலங்கையின் மத்திய ஆட்சி அமைப்பில் அமர்ந்திருக்கும் தலைவர்களின் குறிப்பாக ஜனாதிபதியின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! மதிப்பு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப்படும். கிடப்பில் இருந்த கடன்கள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மனவருத்தத்தை தருவதாக இருக்கலாம். கவனமாக கையாள்வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! மனோ தைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். பண வரத்து இருந்தாலும் தேவை அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்களால் நன்மை உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்.





மிதுனராசி அன்பர்களே! சுப காரிய தடைகள் அகலும். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்தியோகத்தில் சாமர்த்தியமாக செயல்பட்டு மேலகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் உண்டாகும்.




கடகராசி அன்பர்களே! தடைகளை தகர்த்தெறிந்து முன்னேற்றம் காண்பீர்கள். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் கடன் பாக்கிகள் வசூலாகும்.





சிம்மராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியா பாரத்தில் பார்ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது. வியாபார போட்டிகள் குறையும்.




கன்னிராசி அன்பர்களே! காரிய வெற்றி உண்டாகும். புத்தி சாதூரியத்தால் எதையும் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். செவ்வாய் சஞ்சாரத்தால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்யோகத்தில் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். மருத்துவம் சார்ந்த செலவுகள் நேரலாம். ஆயுதங்கள் கையாளும் போதும், வாகனங்களை ஓட்டும் போதும் எச்சரிக்கை அவசியம். அடுத்தவர்களுக்கு உதவ போய் வீண் பழி ஏற்படலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதி கரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத்து க்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள்





விருச்சிகராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். ராசியில் குரு இருப்பதன் மூலம் ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவர்.




மகரராசி அன்பர்களே! கொடுக்கல், வாங்கலில் இருந்த பிரச்சனை தீரும்.எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளி நாட்டு பயணம் சாதகமாக இருக்கும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து நன்மதிப்பை பெறுவார்கள்.




கும்பராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம். கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். வேலை செய்யும் இடத்தில் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது




மீனராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் மற்றும் கேதுவால் பொருள்வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். தைரியாதிபதி சூரியனும் தொழில் ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். எதிர்பார்த்த லாபம் வரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆர்டர்கள் கைக்கு வந்து சேரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# இந்தியாவின் அயலக இராஜதந்திரமும்

(14ம் பக்கத் தொடர்ச்சி) பெருமளவுக்கு கடமைப்பட்டவர்கள் அல்ல) விவகாரங்களைக் கையாளுவதற்கு மோடி அரசாங்கம் அதன் முன்னைய வலிமையான அயலுறவுக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது.

ஈரானின் டினா கப்பல் அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம், பிராந்தியத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பை வழங்கும் நாடு என்ற தனது நிலையைச் சவாலுக்கு உள்ளாக்கியிருக்கிறது என்பததையும் இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டும். அமெரிக்கா, ஜப்பான், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய மூலோபாயக் கூட்டணியான குவாட்'டின் (Quad) உறுப்புநாடாக இந்தியா இருக்கின்ற போதிலும், இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா தாக்குதலை நடத்தியிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

2025 ஜீலையில் இறுதியாக நடத்திய தங்களது கூட்டத்தில் குவாட் வெளியுறவு அமைச்சர்கள் வெளியிட்ட அறிக்கையில் இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் 'சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும்' பேணுவதில் தங்களுக்குரிய கடப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதுடன் தற்போதுள்ள நிலைவரத்தை படை பலத்தின் மூலமாகவோ அல்லது கட்டாயப்படுத்துவதன் மூலமாகவோ மாற்றுவதற்கு ஒரு தலைப்பட்சமாக மேற்கொள்ளப்படக் கூடிய எந்தவொரு முயற்சியையும் (இது சீனாவைக் குறிப்பது) உறுதியாக எதிர்ப்பது என்றும் பிரகடனம் செய்தனர்.

அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாக செயல்படுகின்ற நிலையில், இந்தியா எதிர்காலத்தில் எதிர்பாராத விதமாகச் சம்பவங்களுக்கு முகங்கொடுக்காமல் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்கு அதன் கடல்சார் பிராந்தியக் கூட் டணியை (இந்து சமுத்திரக் கரையோர நாடுகள் சங்கம், கொழும்பு பாதுகாப்பு குழுமம், இந்து சமுத்திரப் பிராந்திய தகவல் கூட்டிணைவு நிலையம் உட்பட) பலப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். தெற்காசியாவுக்கு கூடுதலான அளவுக்கு பிராந்திய வர்த்தகம், போக்கு வரத்து தொடர்புகள், சக்தி வள பகிர்வுக்கான தளங்கள் தேவைப்படுகின்றன. உப கண்டத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் பங்கும் ஈடுபாடும் இருக்கக் கூடியதாக பிராந்தியப் பாதுகாப்பு தொடர்பில் பெருமளவுக்கு சம்பாசணைகளும் தெற்காசியாவுக்கு அவசியமாகும். தற்போது குவாட்டின் தலைமைத்துவ நாடாக இந்தியா இருப்பதால் இந்த வருடம் அந்த அமைப்பின் உச்சி மாகநாட்டை நடத்த வேண்டியிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கலந்து கொள்வார். மேற்காசியப் போரைக் கருத்திற் கொண்டு பிராந்தியத்தின் கடற்பரப்பில் பெருமளவுக்கு உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான சிறந்த தொடர் பாடல்களை உறுதி செய்யும் நோக்கில் குவாட் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டியதே இந்தியா உடனடியாக முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயம்.

### சமநிலையை திரும்பவும் ஏற்படுத்துதல்

உலகின் வடக்கு – தெற்கு பிறவின் மறுபக்கத்தில் இந்தியா இந்த வருடம் பிறிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, சீனா இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய அமைப்பு) உச்சிமகாநாட்டை நடத்தவிருக்கிறது. அந்த மகாநாட்டுக்காக தற்போது பகைமை நாடுகளாக மாறி விட்ட ஈரான், ஐக்கிய அரபு இராச்சியத்தை ஒரு மேசைக்கு கொண்டு வர வேண்டும். அதற்கு தற்போதைய பதற்ற நிலைக்கு மத்தியில் புதுடில்லி தனது இராஜதந்திர ஆற்றலை வெளிக்காட்ட வேண்டியிருக்கும்.

பிறிக்ஸ உச்சி மகாநாட்டில் தெற்காசியாவின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு அக்கறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அறிக்கையை வெளியிடுவதற்கு கருத்

தொருமிப்பைக் காண இந்தியா கடுமையாகப் பாடுபட வேண்டியிருக்கும். அமெரிக்கா – இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடை யில் தற்போது சமநிலையான செயற்பாட்டை கைவிட் டிருக்கும் இந்தியா மேற்காசியக் கொள்கையில் சமநி லையான கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்க வேண்டிய நேரம் இது. கயிற்றில் நடப்பதைப் போன்ற இந்த செயற்பாட்டில் இந்தியாவின் பாரம்பரியமான நிலை பதற்றமானதாக இருக்கலாம். ஆனால், இந்திய மக்களினதும் அயல்நாடு களினதும் மக்களினதும் எதிர காலத்தை வழிநடத்தக்கூடிய வாய்ப்பான ஒரு அந்தஸ்தை அது புதுடில்லிக்கு கொடுக்கும். (தி இந்து)

# ஒரு கொலையும் யாழ்ப்பாணத்தவரின் ...

(15ம் பக்கத் தொடர்ச்சி) பண்பாட்டு மறுமலர்ச்சி. அதற்கு ஒரு அரசியல் தரிசனமும் அதன் வழிவந்த பண்பாட்டு தரிசனமும் இருக்க வேண்டும். அதற்கு அரசியல் தலைமைத்துவம் வேண்டும் பண்பாட்டுத் தலைமைத்துவம் வேண்டும்.ஆனால் கொடுமை என்னவென்றால், நமது அரசியல்வாதிகள் தங்கள் கட்சிக்குள் வரும் விவகாரங்களையே தீர்க்க முடியாதவர்களாக, தங்களுடைய கட்சிக் காரனுக்கு எதிராகவே வழக்குப் போடுகிறவர்களாக,தங்கள் கட்சியைக் கொண்டு போய் நீதிமன்றத்தில் நிறுத்துகிறவர்களாகக் காணப்படும் ஒரு சமூகத்தில் குடும்பங்களுக்குள் வரும் முரண்பாடுகள் குற்றச்செயல்களாக விகார வளர்ச்சி அடைவதைத் தடுக்கும் விதத்தில் குடும்பத் தலைமைத்துவத்தின் முகாமைத்துவத் திறன்களைக் கட்டியெழுப்புவது யார்?

# கொழும்பு மைய அரசியலும் இணக்க....

(21ம் பக்கத் தொடர்ச்சி) இயங்க வைக்கவே முடியாத நிலையாகும். இன்றைய உண்மை, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த முடியாத சூழலாகும். இந்த நிலையில் 'தாயகக் கோட்பாடு'என்பதை 1970, 1980, 1990, 2000 போன்ற காலகட்டத்தில் கருதியதைப்போல இப்பொழுதும் கொள்ள முடியுமா? கொழும்பு மைய அரசியலும் தமிழீழ தாயகக் கோட்பாடும் என்று இரண்டு வேறு கொள்கை நிலைகள் உள்ளதாக சுவாரசியத்துக்காகப் பட்டிமன்ற விவாதங்களை நடத்திக் கொள்ளலாம். நடைமுறை அரசியலில் சாத்தியமான வற்றுக்கே வலிமை அதிகம். வரலாறும் உண்டு. கற்பனைக் குதிரைகள் ஓடுவதுமில்லை. களைப்பதுமில்லை. அப்படியான குதிரைகளை ஓட்டிக் கொள்வோர் சுய இன்பம் காண்பதன்றி வேறொன்றும் நிகழ்வதில்லை.

### கூச்சமில்லாமல் ஜிப்பைக் கழற்றுபவர்கள் - சின்மயி தாக்குதல்

(6ம் பக்கத் தொடர்ச்சி) பாதிக்கப்பட்டவர்களின் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாமல், அவர்களின் மீதே பழி போடும் மனநிலையைச் சின்மயி தனது பதிவின் மூலம் கடுமையாகச் சாடியுள்ளார்.

# வாழ்நாள் போராளிகள்! முன்னாள் போராளிகள்! இந்நாள் போராளிகள்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் டில்கோ விருந்தினர் விடுதியில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.போராளிகள் நலன்புரி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில், சமகால அரசியலில் போராளிகளின் வகிபாகம் என்ற தலைப்பின் கீழ் பலரும் உரையாற்றினார்கள்.

போராளிகள் நலன்புரி அமைப்பு என்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து 2009க்குப்பின் புனர்



வாழ்வு பெற்ற தடுப்பிலிருந்து விடுதலை செய்யப்பட்ட, அல்லது கைது செய்யப்பட்ட பின் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும்.

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்கள் கடந்த 16 ஆண்டுகளாக ஜனநாயக நீரோட்டத்தில் பங்கெடுப்பதற்காக வெவ்வேறு கட்டமைப்புகளை உருவாக்கி வந்திருக்கிறார்கள். இந்த பெரும்பாலான கட்டமைப்புகளில் அங்கம் வகிப்பவர்கள் போராளிகள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். அதேசமயம் அவர்களில் ஒரு பகுதியினர் தங்களை முன்னாள் போராளிகள் என்றும் அழைத்துக் கொள்கிறார்கள். அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், என்.ஜி.ஓக்கள், ஊடகங்கள் என்று எல்லா இடங்களிலும் இந்த முன்னாள் போராளிகள் என்ற வார்த்தைப் பிரயோகம் உண்டு.

இது தொடர்பாக கடந்த கிழமைக்கு முதல் கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் சுட்டிக் காட்டிப் பேசியிருந்தார். அந்தக் கூட்டம் தமிழகத்தின் மூத்த கொம்யூனிஸ்ட் தலைவராகிய நல்லகண்ணுவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம். நல்லகண்ணுவை தமிழக முதல்வர் வாழ்நாள் போராளி என்று அழைத்திருந்தார். ஆனால் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை நாங்கள் முன்னாள் போராளிகள் என்று அழைக்கிறோம் என்று ஐங்கரநேசன் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் போராளிகள் என்று அழைத்தால் அதன் பொருள் அவர்கள் இப்பொழுது போராளிகள் இல்லை என்பதாகும். ஆனால் போராளி என்பது ஒரு பதவி அல்ல. அதில் முன்னாள் இந்நாள் என்று அழைக்கலாமா? ஒரு போராளி கட்டாயம் இயக்கங்களில் இருக்க வேண்டும் என்று இல்லை. ஆயுதம் ஏந்திப் போராடினால் மட்டும் தான் ஒருவர் போராளி என்று அழைக்கப்பட வேண்டும் என்று இல்லை. சமூகத்தின் வெவ்வேறு விவகாரங்களை முன் வைத்துப் போராடும் அனைவருமே போராளிகள் தான். சமூக விடுதலைப் போராளிகள், பெண் விடுதலைப் போராளிகள்.... என்று சமூகத்தின் சிறுமை கண்டு பொங்கும் அனைவருமே போராளிகள் தான். இதுதொடர்பாக கடந்த 16 ஆண்டுகளாக இக்கட்டுரை ஆசிரியரும் உட்பட பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

நல்லகண்ணுவின் கூட்டத்தில் ஐங்கரநேசன் ஆற்றிய உரையை அவர் முகநூலில் பதிவிட்டிருந்தார். அந்த உரைக்குக் கீழ் வந்த ஒரு பின்னூட்டத்தில், முன்னாள் ஈ. பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் பதில் வினை ஆற்றியிருந்தார். அதில் அவர் ஏனைய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இப்பொழுதும் அரசியல் செய்கிறார்கள். அவர்கள் தங்களைப் போராளிகள் என்று அழைத்துக் கொள்வதில்லை. தங்களுடைய கட்சிகள்,அமைப்புகளின் பெயர்களால் தான் தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் மட்டும் ஏன் தங்களைப் போராளிகள் என்று அழைத்துக் கொள்கிறார்கள்? என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அந்தக் கேள்வி நியாயமானது.அ ந்த முகநூல் பதிவில் அதற்குரிய பதில் வந்திருக்கவில்லை. கடந்த 16 ஆண்டுகளாக முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்கள் ஏன் தங்களைப் போராளிகள் என்று அழைத்துக் கொள்கிறார்கள் ?

2009க்குப் பின்னரான தமிழ்த் தேசியவாத அரசியல் எனப்படுவது ஆயுதப் போராட்டத்தின் பெருமைகளுக்கு கொப்பிரைட் எடுப்பதாகத் தான் காணப்படுகிறது. ஆயுதப் போராட்டத்தின் தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் வீரத்தையும் போற்றி அதன் மூலம் நமது வாக்கு வங்கியைத் திரட்டுவதைத் தான் பெரும்பாலான எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமது தேர்தல் உத்தியாகக் கொண்டிருக்கின்றன.

இதில் நினைவு நாட்களுக்கு யார் அதிகம் உரித்துடையவர்கள் என்ற விடயத்தில் அவ்வப்போது மோதல்களும் ஏற்படுவதுண்டு. இவ்வாறு கடந்த 16 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தின் மெய்யான வாரிசுகளாக தங்களைக் காட்டிக்கொள்ள முற்படும் கட்சிகள் அல்லது ஆயுதப் போராட்டத்தின் விளைவுகளைத் தமது தேர்தல் மைய அரசியலுக்குப் பயன்படுத்தும் கட்சிகள், அல்லது முன்னாள் இயக்கத்தவர்களை தமது உட்கட்சி முரண்பாடுகளுக்கு வசதியாகப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் போன்ற யாருமே, எந்தப் போராட்டத்தை தமது வாக்குமைய அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்தி வருகிறார்களோ, அந்தப் போராட்டத்திற்கு உண்மையாக இல்லை. அல்லது அந்த போராட்டத்தின் இலட்சியங்களுக்கு விசுவாசமாக இல்லை என்ற ஓர் அபிப்பிராயம் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு

தமிழ்த் தேசியக் கோஷங்கள் பெரும்பாலும் திருடர்கள் எடுத்தணியும் முகமூடிகளாக அப்பொழுதோ மாறி விட்டன. பாதுகாப்பான இறந்த காலத்தைப் பெற்றவரெல்லாம் நிகழ்காலத்தின் பேச்சாளர்களாக மேலெழுந்து விட்டார்கள். யாரெல்லாம் இறந்த காலத்தில் தமது இனத்துக்காக தியாகம் செய்யப் புறப்பட்டார்களோ அவர்களெல்லாம் இப்பொழுது கைதிகளாக அரைக் கைதிகளாக, கைவிடப்பட்டவர்களாக தடுப்பிலிருந்து வந்தவர்களாக, மதிக்கப்படாதவர்களாக சந்தேகிக்கப்படுகிறவர்களாகக் காணப்படுகிறார்கள். கடந்த 16 ஆண்டுகளிலும் இலங்கைத் தீவில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய ஒரு பிரிவினராக(most vulnerable) காணப்படுவது தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்கள் தான்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் எப்பொழுதும் அவர்களுடைய தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது. சாதாரண ஒன்றிணைவைக் கூட மீளுருவாக்கம் என்ற பெயரில் ஒரு சட்டப் பிரச்சினையாக மாற்றக் கூடிய சட்டச் சூழல் இப்பொழுதும் உண்டு. எனவே இலங்கைத் தீவின் அரசியல் நீரோட்டத்தில் அதிகம் ஆபத்துக்குள்ளாகக்கூடிய ஒரு பிரிவினராக முன்னாள் இயக்கத்தவர்கள் காணப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் எந்த அமைப்பை,எந்தக் கருநிலை அரசைக் கட்டியெழுப்பினார்களோ, அதன் பெருமைகளைக் கொப்பிரைட் எடுக்க முற்படும் கட்சிகளும் அரசியல்வாதிகளும் அவர்களைப் பொருட்படுத்துவதில்லை. அல்லது தேவைக்குப் பயன்படுத்தி விட்டு வீசி விடுகிறார்கள். அல்லது அவர்களைச் சந்தேகிக்கிறார்கள்.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் தங்களுடைய இறந்த காலத்தை கொப்பிரைட் எடுக்க முற்படும் கட்சிகளின் மத்தியில் தாங்கள் தான்



அதன் உண்மையான வாரிசுகள் அல்லது தாங்கள் தான் அந்த போராட்டத்தின் உண்மையான தொடர்ச்சிகள் என்று காட்டவேண்டிய தேவை தங்களுக்கு இருப்பதாக பெரும்பாலான முன்னால் இயக்கத்தவர்கள் நம்புகிறார்கள். அந்த அடிப்படையில் தான் அவர்கள் தங்களைப் போராளிகள் என்று அழைத்துக் கொள்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா? ஆனால் கடந்த 16ஆண்டுகளிலும் அவர்கள் தாங்களாக கட்சியை உருவாக்கியும் அல்லது ஏனைய கட்சிகளோடு இணைந்தும் தேர்தல் கேட்டிருக்கிறார்கள். எனினும் தொடர்ச்சியாகத் தோற்கடிக்கப்பட்டு வருகிறார்கள். தமது இறந்த காலத்தைத் தேர்தல் மொழியில் மொழி பெயர்க்க அவர்களால் முடியவில்லை. தேர்தல் மைய அரசியலுக்குத் தேவையான தொழில் திறன்களை,தந்திரங்களைக் கற்றுக்கொண்டு தேர்தல் மேடைகளில் வெற்றி பெற அவர்களால் இன்றுவரை முடியவில்லை.

ஆனால் இது தமிழ்த் தேசிய அரசியலுக்கு மட்டுமான ஒரு தோற்றப்பாடு அல்ல. உலகப் பொதுவானது. இலட்சியவாதிகளும் உண்மையான தியாகிகளும் நேர்மையானவர்களும் தேர்தல்மைய அரசியலில் ஒன்றில் இறங்குவதில்லை அல்லது இறங்கினாலும் மிகக்குறைந்த அளவே வெற்றிகளைப் பெறுகிறார்கள்.

உதாரணம் இங்கே முன்னர் குறிப்பிட்ட நல்லகண்ணு .நல்லகண்ணுவைத் தவிர வேறு ஒரு உள்ளூர் உதாரணத்தையும் இங்கு சுட்டிக் காட்டலாம். சில ஆண்டுகளுக்கு முன் தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின்னணியில் இருந்த அமைப்புகள் ஒன்று திரண்டு குடைச் சின்னத்தின் கீழ் தேர்தலில் போட்டியிட்டன. ஆனால் அந்த கூட்டமைப்பு கட்டுக்காசையும் இழக்கும் அளவுக்கு கேவலமாக சிங்கள மக்களால் தோற்கடிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கிளர்ச்சிகளின் ஓரத்தில் நின்று அந்தக் கிளர்ச்சியின் கனிகளை தேர்தல் மொழியில் ஹைஜாக் பண்ணிய ஜேவிபி இப்பொழுது நாட்டின் ஆளுங்கட்சியாக வந்து விட்டது.

ஜேவிபியை இதயமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியில் இருந்து முன்னாள் இயக்கத்தவர்கள் கற்றுக் கொள்ளலாம். தேசிய மக்கள் சக்தியின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டை இக்கட்டுரை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆயுதப் போராட்ட அமைப்பாகிய ஜேவிபி அதன் இரண்டு புரட்சிகளிலும் தோற்கடிக்கப்பட்டது. இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்டது. இரண்டு தடவைகள் அதன் தோழர்கள் மிகக்குரூரமான விதங்களில் கொன்று எரிக்கப்பட்டார்கள் அல்லது புதைக்கப் பட்டார்கள் (21ம் பக்கம் பார்க்க)

# கொழும்பு மைய அரசியலும் இணக்க அரசியலும் குற்றமா?

தமிழ்த்தேசிய அரசியலை கொழும்பு மைய அரசியல்' பலவீனப்படுத்துகிறது என்ற பெருங்கவலை தீவிரத் தமிழ்த்தேசிய அரசியல் விருப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா. சம்பந்தனும் அவரால் தமிழ் அரசியற் பரப்பிற்குள் கொண்டு வரப்பட்ட மதியாபரணம் சுமந்திரனும் தான் கொழும்பு மைய அரசியலுக்கான கதவைத் திறந்தவர்கள் என்ற அபிப்பிராயமும் கோபமும் இவர்களிடமுண்டு. தங்களுடைய இந்தக் கவலையையும் கோபத்தையும் பல்வேறு வழிகளில் அவர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் 'கொழும்பு மைய அரசியல்' என்று இப்பொழுது அடையாளப்படுத்துவது, சுமந்திரனை மனதில் கொண்டே. சுமந்திரனுக்கு முன்பு, சம்பந்தன் மீது இந்தக் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அதனால் தான் சம்பந்தன் இறந்த போது ஒரு தலைவர் இறந்த உணர்வை வெளிப்படுத்திக் கொள்வதற்கும் சம்பந்தனின் மறைவுக்கு மதிப்பளிக்கவும் இந்தத் தரப்பினர் பின்னின்றனர். மட்டுமல்ல, சம்பந்தனின் இறுதி நிகழ்வைப் புறக்கணித்து, தங்கள் வன்மத்தைத் தீர்த்துக் கொண்டனர். சம்பந்தன் மறைந்த பிறகு சுமந்திரன் மீது அந்தக் கோபம் மடைமாற்றம் செய்யப்படுகிறது.

இவர்களுடைய கருத்தின்படி 'கொழும்பு மைய அரசியல்' என்பது, தமிழீழத்துக்கு எதிரானது; விடுதலைப்புலிகளுக்கு எதிரானது. ஒரு நாடு இரு தேசம் என்பதற்கு எதிரானது. தாயகக் கோட்பாட்டுக்கு எதிரானது. சமஸ்டிக்கு எதிரானது... என்றெல்லாம் வியாக்கியானப் படுத்தப்படுகிறது. இன்னொரு விதமாகச் சொன்னால், சம்பந்தனும் சுமந்திரனும் செய்து வருவது விட்டுக்கொடுப்பு அரசியல். மறுவளமாக அது ஒடுக்குமுறையை ஏற்றுக் கொள்ளும் அரசியல். அதாவது தமிழ் மக்களின் அபிலாஷைகளை விட்டுக் கொடுத்தல். சிங்கள மேலாதிக்கத்தை நிபந்தனைகளின்றி ஏற்றுக் கொள்ளல் என.

இதனை இவர்கள் எங்கே இருந்து கண்டு பிடித்தார்கள் என்றால், 'நல்லாட்சி'க் காலத்தில் (2015 — 2019) 'ஏக்கிய ராஜ்ய' என்ற அடிப்படையில் அரசியல் அமைப்புக்கான வரைபை இலங்கை அரசு முன்வைக்க முயன்ற போது, அதனை நியாயப்படுத்தும் வகையில் சம்பந்தனும் சுமந்திரனும் செயற்பட்டனர், அன்றைய ரணில் — மைத்திரிபால அரசாங்கத்துக்கு நிபந்தனையின்றி ஆதவளித்தனர் என்பதிலிருந்தே. அப்பொழுது சுமந்திரன், சம்பந்தன் ஆகியோரின் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன என்பதை நினைவிற் கொள்ளலாம்.

அப்பொழுதான் மேற்படி இருவரும் கொழும்பை மகிழ்ச்சிப்படுத்த விரும்புகின்றனர் என்ற அபிப்பிராயம் அல்லது சந்தேகம் தீவிர தமிழ்த் தேசியவாதிகளிடத்தில் உருவானது. அது பின்னர் அவர்கள் இருவருக்கும் எதிரான அரசியலாக வளர்த்தெடுக்கப்பட்டது. என்பதால் சம்பந்தனையும் சுமந்திரனையும் அரசியல் ரீதியாக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களும் எதிர் கொள்ள முடியாதிருந்தோரும் அதனைப் பெரிதாக்கினர். இப்பொழுதும் இதுவே நிலைமை.

இவர்களுடைய அபிப்பிராயத்தின்படி பார்த்தால் 'கொழும்பு மைய அரசியலைச் செய்வதன் மூலம் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் கிடைத்த லாபங்கள் என்ன? இதன் மூலம் தொடர்ந்து சுமந்திரன் பெற்றுக் கொள்வதென்ன? அதை எவரும் இதுவரையில் முன் வைத்தில்லை.



பதிலாக தீவிரத் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை முன்னெடுப்பதாகத் தோற்றம் காட்டும் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன், சிறிதரன் போன்றோர் பல சந்தர்ப்பங்களில் அரசுடன் இணங்கி சில பல சலுகைகளைப் பெற்றுள்ளனர் என்பது பலராலும் கூறப்பட்டு வருவதை இவர்கள் பொருட்படுத்துவதில்லை.

ஒரு அரசியல் நிலைப்பாட்டை ஒருவரோ அல்லது ஒரு தரப்பினரோ எடுப்பதன் மூலம் நன்மைகளும் தீமைகளும் நிகழ்வதுண்டு. ஒன்று, அந்த நபருக்கு அல்லது அவருடைய அணிக்கு நன்மைகள் கிட்டும். அல்லது அந்தக் கட்சிக்கு நன்மைகள் கிடைக்கும். அதைப் போலவே தீமைகளும் ஏற்படும். சம்பந்தனும் சுமந்திரனும் எடுத்த நிலைப்பாடு தமிழ் மக்களுடைய உரிமைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் எதிரானதா? அப்படியென்றால் அது எந்த வகையில் எதிரானது? என்பதை குற்றச்சாட்டை முன்வைப்போர் சொல்ல வேண்டும். பதிலாக அதற்கு மாற்றான அரசியல் நிலைப்பாட்டையும் அதனுடைய சாத்தியத்தையும் அதற்கான வழிமுறைகளையும் அவர்கள் தெளிவுறுத்துவது அவசியமாகும்.

ஜனநாயக அரசியற் களத்தில் பல்வேறு சிந்தனைப் போக்குகளும் நிலைப்பாடுகளும் உருவாகுவது இயல்பு. அது தவிர்க்க முடியாதது. இந்தப் புரிதலற்று, இந்த அடிப்படையை மறுதலிப்பதும் மாற்று அபிப்பிராயத்தை அல்லது மாற்று நிலைப்பாட்டை துரோகமாக — எதிராகப் பார்ப்பது ஜனநாயக விரோதமாகும். அது பாசிச உணர்வின் அடிப்படையைச் சேரும்.

நான் மட்டும் சரி, என்னுடைய நிலைப்பாடு மட்டுமே உண்மையானது, மற்றதெல்லாம் தவறானது, ஏற்றுக் கொள்ள முடியாதது என்பது பாசிசமே.ச ம்மந்தனும் சுமந்திரனும் மேற்கொண்டது 'கொழும்பு மைய அரசியல்' அல்ல. அவர்கள் இருவரும் யதார்த்த நிலை அரசியலையே மேற்கொண்டனர். போருக்குப் பிந்திய சூழல், சர்வதேச, பிராந்திய நிலைப்பாடுகள், நடைமுறை அனுபவங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சிநேகபூர்வமான அரசியல். விட்டுக் கொடுப்புகளற்ற, அதேவேளை முரண் பிடிக்காத ஒரு மென்னிலை அரசியல். இன்னொரு விதமாகச் சொன்னால், சிங்களத் தரப்பை வளைத்துப் பிடிக்கும் ஒரு வகையான தந்திரோபாய அரசியலை முயற்சித்தனர். அதில் போதாமைகளும் குறைபாடுகளும் இருந்தன. ஆகவே, அதில் விமர்சனத்துக்கும் கவனத்திற்கும் உரிய இடங்கள் உண்டு.

இந்தக் கட்டுரையாளர் அதைத் தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்திருக்கிறார். இப்பொழுதும் விமர்சனத்துக்குரிய இடங்கள் இருக்கிறது. ஆனால், விட்டுக் கொடுப்புகள் ஏதும் அதில் இல்லை என்பது கவனத்திற்குரியது. சம்பந்தனுடைய பாராளுமன்ற உரைகளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், தலைவர்களுடனான சந்திப்புகளின் போது சம்பந்தன் தெரிவித்த விடயங்களும் வெளியிட்ட அறிக்கைகளும் இதற்கு ஆதாரம். என்பதால் தான் சம்மந்தனுக்கும் சுமந்திரனுக்கும் இலங்கையில் சிங்கள, மலையக, முஸ்லிம் அரசியற் தரப்புகளிடத்திலும் அந்தச் சமூகங்களிடத்திலும் மதிப்பு உண்டாகியது. மட்டுமல்ல, சர்வதேச ரீதியான மதிப்பும் (கவனிப்பும்) தமிழ் அரசியற் பரப்பில் இவர்கள் இருவருக்குமே இருந்தது. இப்பொழுது சுமந்திரனையே அவர்கள் தமிழ்ப் பரப்பின் பிரதிநிதியாக நோக்கும் கருதும் நிலை உண்டு. இவ்வளவுக்கும் சுமந்திரன் பாராளுமன்ற உறுப்பினர் கூட இல்லை. ஒரு கட்சியின் செயலாளர் மட்டுமே.

இதற்கு அப்பால் கடந்த கால ஆட்சித் தரப்புகளோடும் எதிரணிகளோடும் சம்பந்தனும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் நடந்து கொண்ட முறைமைகள், உடன்பாடுகள் (இரகசிய — வெளிப்படையான) பற்றி விவாதிப்பதற்கு நிறைய உண்டு. எளிய உதாரணங்கள் இரண்டு.

1.யுத்தத்தைத் தலைமையேற்று நடத்திய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்தது.


கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -




2. 'நல்லாட்சி' என்ற பேரில் ரணில் — மைத்திரிபால சேனநாயக்க ஆட்சிக் காலத்தில் அந்த ஆட்சியுடன் நெருக்கிச் செயற்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்திருக்க வேண்டிய, செயற்படுத்தியிருக்க வேண்டிய பல விடயங்களைச் செய்யத் தவறியமை.

இது சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் மீதான தனியான குற்றச்சாட்டு மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியினுடைய இயல்பின் மீதும் அதனுடைய அரசியல் நிலைப்பாட்டின் மீதும் வைக்கப்பட வேண்டிய குற்றச்சாட்டாகும். தமிழரசுக் கட்சி தலைமை தாங்கியதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான குற்றச்சாட்டாகவும் விமர்சனமாகவும் ஆகிறது.

அப்படையில் தமிழரசுக் கட்சியானது, கொழும்புடன் (ஐக்கிய தேசியக் கட்சியுடன்) நெருக்கமான உள நிலையையும் உறவையும் கொண்டது. இது அதனுடைய தொடக்க காலத் தலைவரான எஸ். ஜே. வி. செல்வநாயம் காலத்திலிருந்து வழி வழியாக வருகின்ற ஒரு நிலையாகும். செல்வநாயகத்துக்குப் பின்னர் தமிழர்களின் அரசியலுக்குத் தலைமை தாங்கிய அல்லது தமிழர்களால் தலைவராகக் கருதப்பட்ட அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் இதே வழிமுறையைப் பின்பற்றினார்.

அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, கொழும்புடன் இணங்கி மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொண்டது இதற்கு உதாரணம். இதனை அன்றைய ஆயுதமேந்திய விடுதலை இயக்கங்கள் கடுமையாக எதிர்த்தன என்பது வரலாறு. ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டின் மீதும் அதனுடைய இயல்பின் மீதுமே விமர்சனத்தை வைக்க முடியுமே தவிர, அதைத் தவிர்த்து, அதில் உள்ள தனியான (தலைமை) உறுப்பினர்களின் மீது விமர்சனங்களை வைப்பது பொருத்தமானதல்ல. அது பயனுடையதும் அல்ல.

தமிழரசுக் கட்சியில் சம்பந்தன், சுமந்திரன், சி.வி.கே. சிவஞானம், சாணக்கியன் போன்றோர் மென்போக்கிலான அரசியலை மேற் கொள்கின்றனர். கொழும்பில் உள்ள சிங்களக் கட்சிகளோடும் தலைவர்களோடும் நெருக்கமான உறவில் உள்ளனர். அதைப் போல முஸ்லிம், மலையகக் கட்சிகளோடும் அவற்றின் தலைவர்களோடும் நெருக்கமாக அல்லது புரிந்துணர்வுடன் கூடிய உறவில் உள்ளனர். அப்படித்தான் தமிழரசுக் கட்சிக்கு வெளியே உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், சமத்துவக் கட்சி, ரெலோ, ஜனநாயகப் போராளிகள் போன்ற கட்சிகளோடும் உறவைப் பேணுகின்றனர். ஒரு கட்டத்தில் யாழ்ப்பாண மாநகர சபையில் தமது தரப்பை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் சி.வி.கே. (21ம் பக்கம் பார்க்க)

# வாழ்நாள் போராளிகள்! முன்னாள் போராளிகள்! இந்நாள் போராளிகள்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) அல்லது ஆறுகளில் வீசப்பட்டார்கள்.மொத்தம் 85 ஆயிரத்துக்கும் குறையாத தோழர்கள் அவ்வாறு கொன்றொழிக்கப்பட்டதாக அந்த அமைப்புக் கூறுகிறது.

ஆனால் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட அந்த இயக்கமானது, தன் சொந்தச் சாம்பல் மேட்டில் இருந்து தன் தோழர்களின் புதை மேட்டில் இருந்து மீண்டு எழுந்தது. தன்னைத் தேசிய மக்கள் சக்தியாக, தேர்தல் கவர்ச்சி மிக்க ஒரு புதிய கட்டமைப்பாக வளர்த்துக் கொண்டது. அதன் பின் பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின் கனிகளை தேர்தல் மேடைகளில் வெற்றிகரமாக ஹைஜாக் பண்ணியது.

போராட்டங்களில் பிரதானமாக பின்னணியில் நின்ற அமைப்புக்களால் தமது போராட்டத்தின் வெற்றிகளை தேர்தல் மொழியில் வெற்றிகரமாக மொழிபெயர்க்க முடியவில்லை.ஆனால் தேசிய மக்கள் சக்தி அதைச் செய்தது. இப்பொழுது ஆளும் கட்சியாக எழுச்சி பெற்று விட்டது.

ஓர் ஆயுதப் போராட்ட அமைப்பு எப்படி ஆளுங்கட்சியாக வர முடியும் என்பதற்கு அது ஓர் உதாரணம். இனப்பிரச்சினை தொடர்பான என்.பி.பியின் நிலைப்பாட்டை இக்கட்டுரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ஓர் ஆயுதப் போராட்ட அமைப்பு,ஏப்படி தேர்தல் மேடைகளில் வெற்றி பெற முடிந்தது என்ற விடயத்தில் அங்கு கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் உண்டு.

இங்கு ஒரு முக்கியமான கள நிலவர வேறுபாட்டை ஒப்பீடு செய்ய வேண்டும். 1980களின் இறுதியில் நசுக்கப்பட்ட பின்னர் ஜேவிபியின் அரசியலை கொப்பிரைட் எடுப்பதற்கு அங்கிருந்த பெரும்பாலான மேட்டுக்குடி மைய அரசியல் கட்சிகள் முயற்சிக்கவில்லை. முயற்சிக்கவும் மாட்டார்கள். ஏனென்றால் ஜேவிபியின் அரசியல் பாரம்பரியம் வேறு. அவர்களுடைய அரசியல் பாரம்பரியம் வேறு. அதனால் ஜேவிபியின் இரண்டு ஆயுதப் போராட்டங்களையும் கொப்பிரைட் எடுப்பதற்கு அங்கே வேறு எந்தக் கட்சியும் இருக்கவில்லை.

ஆனால் தமிழ்த் தேசிய அரசியலில் அப்படியல்ல. தமிழ்த் தேசிய அரசியலில் ஆயுதப் போராட்டத்தின் நன்மைகளை உன்னதங்களை கொப்பிரைட் எடுக்க முற்படும் தமிழ்த் தேசியவாத கட்சிகளின் மத்தியில் முன்னாள் இயக்கத்தவர்கள் தங்கள் தான் உண்மையான வாரிசுகள் என்று நிரூபிக்க வேண்டிய அரசியல் தேவை ஏற்பட்டது. ஆனால் அவ்வாறு தங்களை போராளிகள் என்று அடையாளப்படுத்திக் கொண்டதனால் அவர்கள் தேர்தல் மைய அரசியலில் வெற்றிகளைப் பெற முடியவில்லை என்பதை கடந்த16 ஆண்டுகளையும் தொகுத்துப் பார்த்தால் தெரியவரும்.

எனவே தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கு அவர்கள் ஜனநாயக வழியில் வேறு எதையோ செய்ய வேண்டியிருக்கிறது என்பதனை கடந்த 16 ஆண்டுகளும் அவர்களுக்கு உணர்த்தியுள்ளன. ஆயுதப் போராட்ட ஒழுக்கம் வேறு. தேர்தல் அரசியல் ஒழுக்கம் வேறு. இரு வேறு அரசியல் களங்கள். இரண்டுக்குமான வெற்றி வியூகங்களும் உத்திகளும் தந்திரங்களும் வேறு வேறானவை.எனவே தேர்தல்மைய அரசியலுக்குரிய ஒழுக்கத்தை அதற்குரிய தந்திரங்களை தொழில் சார் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டிய கால நிர்பந்தம் முன்னாள் இயக்கத்தவர்களுக்கு உண்டு.

இப்போதிருக்கும் தமிழ்த் தேசிய மிதவாத அரசியலில் பொய்யர்களும் நஞ்சர்களும் நவஞ்சகர்களும் திருடர்களுந் தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று கருதுபவர்கள் நேர்மையான, கண்ணியமான,தமது வாக்காளர்களுக்கு உண்மையான புதிய மாற்றத்தைக் காட்டவல்ல ஒரு ஜனநாயக அரசியல் வழியைப் பலப்படுத்த வேண்டும். ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் நம்பிக்கைகளை எப்படி வென்றெடுப்பது என்று சிந்திக்க வேண்டும்.

இந்தியாவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் ஆபிரிக்க நாடுகளிலும் முன்னாள் போராட்ட இயக்கங்கள் எப்படி ஜனநாயக நீரோட்டத்துக்குள் தங்களை அடுத்த கட்டத்துக்கு தகவமைத்துக் கொண்டன என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். இலட்சியவாதிகளும் நேர்மையானவர்களும் நல்லகண்ணுகளும் தேர்தல்மைய அரசியலில் ஏன் வெற்றி பெற முடியவில்லை என்பதையும் ஆழமாக ஆராய வேண்டும்.

நர்மையானவர்கள் கண்ணியமானவர்கள், உண்மையானவர்கள், வாக்காளர்களுக்கு விசுவாசமானவர்கள் தமது வாக்குறுதிகளுக்கு உண்மையாக இருப்பவர்கள் தமிழ்த்தேசிய அரசியலில் அதிகரித்த எண்ணிக்கையில் ஈடுபடுவார்களாக இருந்தால் தமிழ்த் தேசிய அரசியலிலும் புதிய மாற்றங்களைக் காட்டமுடியும். இப்பொழுது அது தான் பொருத்தமான போராளித்துவம்.

# கொழும்பு மைய அரசியலும் இணக்க....

(20ம் பக்கத் தொடர்ச்சி) சிவஞானம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பணிமனைக்குச் சென்று, அதனுடைய தலைவரான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்திருந்தார். இதெல்லாம் யதார்த்த அரசியலின்பாற்பட்ட விளைவுகள் நடவடிக்கைகளாகும். இவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டு, தனியே நின்று 'அடைந்தால் மகாதேவி, இல்லையென்றால் மரணதேவி'என வீம்புக்குக் கம்பு சுத்தலாம். அப்படித்தான் தீவிரத் தமிழ்த் தேசியவாத தரப்புகள் கற்பனையில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் முன்வைக்கின்ற ஒரு நாடு இரு தேசம் என்பதற்கும் சமஸ்டிக்கு மேலான தீர்வுக்கும் சாத்தியமென்ன? அதற்கான வழிமுறை என்ன? அதற்கான பிராந்திய சர்வதேச ஆதரவு அல்லது மதிப்பு என்ன?என்று இதுவரையில் எவரும் சொன்னதில்லை. இனியும் சொல்லப் போவதில்லை. அல்லது தாம் கருதுகின்ற சொல்கின்ற அந்த நிலைப்பாட்டை எட்டுவதற்கு அவர்கள் அதற்கான வழியில் செயற்படுவதாகவும் இல்லை. இதற்காக அவ்வப்போது புதிய புதிய அமைப்புகளை உருவாக்குவது, அறிக்கைகளை வெளியிடுவது, ஊடகச் சந்திப்புகளை நடத்துவது. ஊடகங்களில் பிரகடனங்களைச் செய்வது, 'கருத்துருவாக்கம்' என்ற கற்பனையில் புனைவுக் கட்டுரைகளை எழுதுவதோடு தங்களுடைய மேலான புரட்சிகரப் பணிகளை நிறைவு செய்து கொள்கின்றனர்.

மிகவும் வலுப் பெற்றிருக்கும் இனவாதத்தையும் அந்த இனவாதத்தை மீறிச் செயற்பட முடியாமல் தடுமாறும் ஆட்சித் தரப்புகளையும் சிங்களக் கட்சிகளையும் எப்படிக் கையாள்வது என்று புரிதலற்றிருக்கும் வரையில் தமிழ் அரசியலில் முன்னேற்றத்தையோ மாற்றத்தையோ காண முடியாது. இன்றைய யதார்த்தம், மாகாணசபைகளை (18ம் பக்ம் பார்க்க)

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# இரத்தக் கறை படித்த கைகளுடன் செய்யும் பிரார்த்தனையை கடவுள் கேட்க மாட்டார் போர் தொடுக்கும் தலைவர்களுக்கு பாப்பரசர் லியோ கடும் எச்சரிக்கை!

ஈரான் மீதான போர் ஒரு மாதத்தை கடந்துள்ள நிலையில், வத்திக்கான் பாப்பரசர் லியோ உலகத் தலைவர்களை நோக்கி மிகக் கடும் விமர்சனங்களை முன் வைத்துள்ளார். போரை நியாயப்படுத்த எவரும் இயேசுவின் பெயரைப் பயன்படுத்த முடியாது என அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பல்லாயிரக்கணக்கான விசுவாசிகள் திரண்டிருந்த புனித பேதுரு சதுக்கத்தில் 28 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை உரையாற்றிய பாப்பரசர்,

எமது கடவுளான இயேசு அமைதியின் அரசர். அவர் போரை வெறுக்கிறார். போரை நியாயப்படுத்த எவரும் அவரைப் பயன்படுத்த முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தலைவரின் பெயரையும் அவர் நேரடியாகக் குறிப்பிடவில்லை என்றாலும், ஈரானில் தாக்குதலை நடத்தி வரும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலியத் தலைவர்களையே அவர் சூசகமாகச் சாடியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

திருவிவிலியத்தின் வாசகங்களை மேற்கோள் காட்டிப் பேசிய அவர், 'போர் புரியும் தலைவர்கள் எத்தனை பிரார்த்தனைகளைச் செய்தாலும் கடவுள் அவற்றைச் செவிமடுக்க மாட்டார். ஏனெனில் உங்களது கைகள் இரத்தத்தால் நிறைந்துள்ளன.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் (Pete Hegseth) உள்ளிட்ட அதிகாரிகள், ஈரானுக்கு எதிரான போரை ஒரு 'கிறிஸ்தவ தேசத்தின் புனிதப் போர்' எனச் சித்தரித்து வருவதற்கு பாப்பரசர் லியோ மறைமுகமாகப் பதிலடி கொடுத்துள்ளார்.

இயேசு தன்னை கைது செய்ய வந்தவர்கள் மீது வாள் வீசிய சீடரைத் தடுத்த சம்பவத்தை நினைவு கூர்ந்த பாப்பரசர், வன்முறை எப்போதும் கடவுளால் நிராகரிக்கப்படும் ஒன்றே என வலியுறுத்தியுள்ளார்.



அமெரிக்காவில் பிறந்த முதல் பாப்பரசர் என்ற பெருமைக்குரிய லியோ, தனது சொந்த நாட்டின் போர் நடவடிக்கைகளை இவ்வாறு பகிரங்கமாக விமர்சித்து வருவது சர்வதேச இராஜதந்திர வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நடத்தப்படும் வான்வழித் தாக்குதல்களை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் எனவும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

# அமெரிக்காவில் ட்ரம்புக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம்!




அமெரிக்கா முழுவதும் உள்ள நகரங்களில் ட்ரம்ப் ட்ரம்ப்பிற்கு எதிராக மாபெரும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கொள்கைகள், அதிகரித்து வரும் விலைவாசி ஈரானுக்கு எதிராக நடந்து வரும் போர் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்கள் உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சுமார் 70 இலட்சம் மக்கள் இந்தப் போராட்டங்களில் பங்கேற்றிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ட்ரம்ப் ஒரு சர்வாதிகாரியைப் போல எங்களை ஆள நினைக்கிறார். ஆனால் இது அமெரிக்கா, இங்கு அதிகாரம் மக்களுக்கே உரியது; மன்னர்களுக்கோ அல்லது அவர்களின் கோடீஸ்வர நண்பர்களுக்கோ அல்ல' எனப் போராட்ட அமைப்பாளர்கள் கோசமிட்டுள்ளனர். இந்தப் போராட்டங்களைக் கிண்டல் செய்துள்ள வெள்ளை மாளிகை ஊடகப் பேச்சாளர், இவை 'ட்ரம்ப் மீதான மனநோய் சிகிச்சை அமர்வுகள்' எனச் சாடியுள்ளார்.

தேசிய நினைவிடங்கள் மற்றும் லிங்கன் நினைவிடம் அமைந்துள்ள பகுதிகள் போராட்டக்காரர்களால் நிரம்பி வழிந்துள்ளன. டைம்ஸ் சதுக்கத்தில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் திரண்டதால், மன்ஹாட்டன் பகுதியின் போக்குவரத்து முழுமையாக முடக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் குடிவரவு அதிகாரிகளால் கொல்லப்பட்ட அமெரிக்கப் பிரஜைகளான ரெனீ நிக்கோல் குட் மற்றும் அலெக்ஸ் பிரெட்டி ஆகியோரின் மரணத்திற்கு நீதி கோரி அங்குப் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். பிரபல பாடகர் புரூஸ் ஸ்பிரிங்ஸ்டீன் அங்குப் பாடல்களைப் பாடி போராட்டக்காரர்களை உற்சாகப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் மட்டுமன்றி, லண்டன், பாரிஸ் மற்றும் லிஸ்பன் போன்ற உலக நாடுகளின் தலைநகரங்களிலும் புலம்பெயர் அமெரிக்கர்கள் திரண்டு ட்ரம்ப்பிற்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினர். அங்குப் ஜனாதிபதி ட்ரம்ப்பை 'போர்க்குற்றவாளி' மற்றும் 'பாசிசவாதி' எனப் போராட்டக்காரர்கள் விமர்சித்துள்ளனர். போராட்டங்கள் அமைதியான முறை யில் நடைபெற்று வந்தாலும், அசம் பாவிதங்களைத் தவிர்க்கப் பல மாநிலங்களில் தேசிய பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிரிகளைத் தண்டிக்க முற்படுவதாகவும், இராணுவத்தை உள்நாட்டு நகரங்களில் நிலைநிறுத்துவதாகவும் எதிர்க்கட்சிகுற்றம் சாட்டியுள்ளது.

